# அரசு ஊழியர்

அக்டோபர் 2021

மலர் : 42 இதழ் : 10

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்

### நண்பனின் குறுஞ்செய்தி

எத்தனை வாத, விவாதங்கள்
எத்தனை சண்டை, சமாதானங்கள்
நமக்குள் நடந்து முடிந்து விட்டாலும்
நடக்கும் உரிமைப் போராட்டங்கள்
இன்னும் முடியவில்லை நண்பனே!

கறுப்பு சிவப்பாக, குண்டு ஒல்லியாக,
உனக்காக எனக்காக எல்லோருக்குமாக
எத்தனையோ தோழர்கள்
போராடிக்கொண்டிருக்கும் போது -
குறைந்தபட்சம் உனக்காக நீயுமாவது
எனக்காக நானுமாவது
போராட்டக் களம்
போகாமல் இருப்பதானது
எத்தனை கேவலமானது?

- **வினவு கவிதை**




# விட்டுக் கொடுக்காத உரிமைக்கான ஒற்றைக் கோரிக்கை மாநாடு! - வெற்றி காண ஒன்றுகூடுவோம் உறுதியோடு!

**தொ**ழிற்சங்க அகராதியில் உரிமை என்ற வார்த்தைக்கு பொருள் போராட்டம் என்று உள்ளது. கார்ல் மார்க்ஸ் காலத்திற்கு முன்பும் சரி ஏங்கெல்ஸ், லெனின், சேகுவாரோ காலங்களுக்குப் பின்பும் சரி இந்த வார்த்தையின் அர்த்தம் மாறவில்லை. இதன் அர்த்தம் மாற்றப்படாத வரையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பினருக்கும் விடியல் என்பது ஏட்டுக்கனியே. அனுமதிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளைக்கூட போராடித் தான் பெற வேண்டும் என்ற போக்கை நம்முடைய காலத்திலாவது மாற்றிவிட முடியாதா என்ற முயற்சிதான் தர்ணாக்களும், கண்டன ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும், மாநாடுகளும்.

“உங்களிடம் போராட்டம் என்ற ஆயுதம் இருக்கும் வரைதான் உங்களுடைய உரிமைகள் உங்களிடம் இருக்கும்'' என்று நமது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ஆசான் தோழர் எம்.ஆர்.அப்பன் அவர்கள் சொன்னதுதான் இப்போதும் எப்போதும் நிதர்சனமாக இருந்து கொண்டிருக்கிறது, இனிமேலும் இருக்கும் என்றே தோன்றுகிறது.

நீதிமன்றங்கள் கணை தொடுக்கின்றன. ஒரு வருட காலமாக சாலைகளை அடைத்துக் கொண்டு பொது மக்களுக்கு இடைஞ்சலாக விவசாயிகள் போராட்டம் நடத்துவதை அனுமதிக்க முடியாது என்கின்றன. தவறான சட்டங்களை அரசாங்கம் இயற்றும் போது அதை பெரும்பான்மையான மக்கள் எதிர்த்து நிற்பது அதுவும் ஒருவருட காலமாக எதிர்த்து நிற்பது ஏதோ எதிர்கட்சிகளின் தூண்டுதலால் நிகழ்வது அல்ல. இத்தகைய சூழலில் நீதிமன்றங்கள் கேள்விக்கணை தொடுக்க வேண்டிய இடம் அரசாங்கத்தை நோக்கியே தவிர போராடும் விவசாயி களையோ மக்களையோ அல்ல. பெரும்பான்மை மக்கள் விரும்புவதே சட்டமாக இருக்க முடியுமே தவிர சில கார்ப்பரேட் முதலாளிகள் விரும்புவது சட்டமாக்கப்படும்போது அது இதுபோன்ற எதிர்வினைகளைத்தான் ஏற்படுத்தும்.

அரசாங்கங்கள் மக்களின் நலனுக்கானது என்கிறார்கள். நாள்தோறும் ஏற்றப்படும் பெட்ரோல் டீசல்

விலைகளும் அவ்வப்போது உயர்த்தப்படும் சமையல் எரிவாயு விலைகளும் எந்த மக்களின் நலனுக்காக என்பது புரியவில்லை. இதுவரை உலகமே கண்டிராத கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் மக்கள் வாழ்வாதாரம் இன்றி அவதிப்படும் நிலையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை ஈவிரக்கமின்றி ஏற்றிவரும் மத்திய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்துப் பேசவோ, கருத்துக்கூறவோ ஊடகங்களோ மற்றவர்களோ முன்வரமுடியாத நிலையில் அனைவரும் வைக்கப்பட்டிருப்பது இந்நாட்டின் பெரிய துரதிருஷ்டவசமே. ஊடகங்கள் உண்மை நிலையை எடுத்துரைக்கத் தயங்குவதும் நீதிமன்றங்கள் அரசாங்கத்தின் வாதங்களை ஆமோதிப்பதும் இன்று சாமானிய மற்றும் நடுத்தர மக்களை வறுமையிலும், ஏழ்மையிலும், பசி, பட்டினி, பஞ்சத்திலும் தள்ளியுள்ளது.

இதற்கு நேரெதிராக ஸ்விஸ் போன்ற வெளிநாட்டு வங்கிகளில் ரகசிய முதலீடுகள் செய்துள்ள அரசியல்வாதிகள் மற்றும் பெருஞ் செல்வந்தர்களின் தொகை 35 சதவீதம் அதிகரித் துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் இந்த கொரோனா காலகட்டத்தில் மக்கள் உயிருக்காகவும் உணவுக்காகவும் போராடிக் கொண்டிருந்த நிலையில் பெரிய கம்பெனிகளில் லாபம் அதிகரித்துள்ளது. அரசாங்கம் ஊக்குவிக்கும் இந்த கார்ப்பரேட் ஜனநாயகம் நடுத்தர மக்களை ஏழைகளாகவும், ஏழைகளை பஞ்சப்பராரிகளாகவும் மாற்றியுள்ளது.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், கம்பெனி தொழிலாளர்கள் போன்றவர்களை இந்த அரசாங்கங்கள் மாதந்தோறும் கைநிறைய சம்பளம் வாங்கும் கணவான்களாக சித்தரித்து அவர்களை பொதுமக்கள் எதிரிகளாக பார்க்கும் வண்ணம் பிரச்சாரம் செய்து வருகின்றன. ஏற்கெனவே வழங்கப்பட்டுவந்த சொற்ப ஊதியத்தையும் குறைத்து அரசின் நிதி வருவாயில் 60 சதவீதத்திற்கும் மேலாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு செலவழிப்பதாக பொய்ப் பிரச்சாரம் செய்துவரும் அமைச்சர்களுக்கு நாம் போராடிபெற்ற உரிமைகளின் வரலாறு தெரிந்திருக்க நியாயமில்லை. கஜானாவில் பணமில்லை என்று கைவிரித்து, நாம் போராடிப் பெற்ற உரிமைகளாக அகவிலைப்படி, சரண் விடுப்பு போன்றவற்றை பறித்தது கொரோனா நெருக்கடி என்ற ஒரு இடைக்காலத்திற்கு மட்டும் தான் என்று எண்ணியிருந்த நிலையில் இப்போது அது தொடர்கதையாக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

தங்கள் கொள்கைகளை பெரும்பாலான அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது திணிப்பதற்கு ஏதுவாக ஐஏஎஸ் ஐபிஎஸ் போன்ற உயரதிகாரம் மிக்கவர்களுக்கு மட்டும் அகவிலைப்படி, ஊதியமாற்று நிலுவை போன்றவற்றை வழங்கி மற்றவர்கள் அதை பெறாமல் பார்த்துக்கொள்ளும் ஏற்பாடுகளும் நடைபெற்று முடிந்திருக்கின்றன. தமிழகத்தில் உள்ள அனைத்து ஐஏஎஸ் ஐபிஎஸ் அதிகாரிகளுக்கும் மற்றும் நீதிபதிகளுக்கும் ஊதிய மாற்ற நிலுவையோ அகவிலைப்படி குறைப்போ இல்லை. உயரதிகாரிகளுக்கு அகவிலைப்படியும் ஊதியமாற்று நிலுவையும் முழுமையாகக் கொடுக்கும்போது மட்டும் கஜானாவில் பணம் இருக்கும். அதுவே அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு ஏன் வழங்கவில்லை என்று கேட்டால் அரசாங்கம் கடனில் இருக்கும். இவற்றை வழக்காக எடுத்து நீதிமன்றத்தில் வாதிட்டால் நீதிமன்றமும் கைவிரிக்கும்.

இந்த அரசாங்கங்களும் நீதிமன்றங்களும் மறுத்துள்ளது நாம் கெஞ்சிக் கேட்ட கோரிக்கை களை அல்ல. சட்டப்படி நமக்கு வழங்க வேண்டிய உரிமைகளை. ஒரு உடலுழைப்பு தொழிலாளர்களின் குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ.18000/ஆக நிர்ணயிக்க வேண்டும் என்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் இன்று எத்தனை நிறுவனங்களில் அத்தகைய நடைமுறை கடை பிடிக்கப்படுகிறது என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. பட்டம் பெற்ற வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டும், அரசுத்துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தற்போதைய விலைவாசிக்கேற்ற ஊதிய மாற்றம் வேண்டும், விவசாயிகளின் வறுமையுடன் கூடிய வேதனையான வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்றெல்லாம் பல்வேறு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் என பலவர்க்கப் பிரிவினரும் போராடிக்கொண்டிருக்க, மக்கள் மூலம் அதிகாரத்தை பெற்றுள்ள ஆட்சியாளர்களோ தங்களுக்குத் தாங்களே (நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்) வரைமுறையற்ற சம்பளம் மற்றும் சலுகைகளை வழங்கி சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர். கஜானாவில் பணமில்லை என்பவர்கள் எம்.எல்.ஏ.க்களுக்கு 110 சதவீதம் ஊதியத்தை உயர்த்துகிறார்கள்.

தமிழகத்தில் அரசு ஊழியர்களுக்கு நியாய மான ஊதிய மாற்றத்தை ஏற்படுத்தாததோடு, முரண்பாடுகளுடன் ஏற்படுத்தப்பட்ட ஊதிய மாற்றத்திலும் 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை கொடுக்காமல் தடுத்துள்ளனர். விவசாயிகள், போக்குவரத்து தொழிலாளர்கள், மின்வாரிய ஊழியர்கள், மாணவர்கள் என அனைத்து பிரிவினரும் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக போராடவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

நாம் பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் அமல்படுத்தப்பட வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்க நமது கோரிக்கை மீண்டும் மீண்டும் புறந்தள்ளப்பட்டுக் கொண்டு வருகிறது. அதே சமயம் இன்னொரு புறம் புதிய

ஓய்வூதியத் திட்டம் இப்போது செட்டில்மெண்ட் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. அதாவது புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வுபெற்ற ஊழியர்கள் ஒருவர் கூட இதுவரை ஓய்வூதியம் பெறவில்லை.

புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இதுவரை ஓய்வு பெற்ற அனைவருக்கும் செட்டில்மெண்ட் செய்யப்பட்டு 20 ரூபாய் பத்திரத் தாளில் இனிமேல் எனக்கும் அரசுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் அரசிடம் இருந்து ஓய்வூதியம் கேட்க மாட்டேன் என்றும் உறுதிமொழி பத்திரம் பெற்றுக்கொண்டு கழற்றி விடும் திட்டம் தான் நடந்து வருகிறது. இது ஓய்வூதியத் திட்டத்தில் அரசு, ஊழியருக்கு இருக்கும் வாழ்வாதாரப் பாதுகாப்பை இல்லாமல் ஆக்கிவிடுவதாக உள்ளது. எனவே எந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றாலும் அந்த ஊழியருக்கு ஓய்வூதிய வாழ்வாதாரப் பாதுகாப்பை நாம் உறுதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமானதாகும். இந்த ஒற்றைக் கோரிக்கைகாக மட்டுமேனும் நாம் அனைவரும் கரம் கோர்த்து நம் வலிமைய அரசுக்கு உணர்த்த வேண்டும்.

இத்தகைய சூழ்நிலையில்தான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாடு சென்னையில் நடைபெறவிருக்கிறது. இது சங்க மற்றும் சமூக ஈடுபாடு உள்ள எந்த ஊழியருக்கும் ஊக்கமளிக்கும் செய்தியே. தமிழகத்தில் அரசுத் துறைகளில் உள்ள 60க்கும் மேற்பட்ட துறைவாரி, பிரிவுவாரி சங்கங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்தும் இந்த மாநில மாநாடு அகில இந்திய அளவில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மாநாடு ஏற்பாடுகள் சென்னை மாவட்ட வரவேற்புக் குழு சார்பிலா நடந்து வருகின்றன.

நாம் அனைவரும் ஒன்றுகூடி ஆதரித்து வாக்களித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் தற்போது முதல்வராக ஆகியுள்ளார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மாபெரும் மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டுகோள் வைத்துள்ளோம். அரசு ஊழியர்பால் அக்கறையும் நம்பிக்கையும் கொண்டுள்ள முதல்வர் அவர்கள் நம்முடைய மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்க நிச்சயம் இசைவு தெரிவிப்பார் என்ற நம்பிக்கை நமக்குள்ளது. ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது நம்முடைய மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பு சேர்த்துள்ள முதல்வர் இந்த மாநில மாநாட்டில் கலந்து கொண்டு நமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பார் என்ற நம்பிக்கை நம்மிடம் உள்ளது. மேலும் தேர்தல் காலத்து வாக்குறுதிகளை நிச்சயமாக நிறைவேற்றுவேன் என்று அவர் மீண்டும் மீண்டும் உறுதிபட தெரிவித்து வருவது நம்மிடம் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது. நிச்சயமாக நமது கோரிக்கைகளில் சிலவற்றையேனும் மாநாட்டில் அறிவிக்கவும் வாய்ப்புகள் உள்ளது. இது தவிர மத்திய, மாநில அரசு, பொதுத்துறை, வங்கித்துறை. காப்பீடுத்துறை, இரயில்வே, ஆசிரியர்கள் அமைப்பு மற்றும் டெலிகாம் நிறுவனத்தின் சார்பில் அதன் தொழிற்சங்க தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு நம்முடைய உரிமைகள் வெல்ல உரை நிகழ்த்தி வாழ்த்திப்பேச உள்ளார்கள்.

அரசுத்துறை ஊழியர்கள் மற்றும் நாட்டு பொது நலன் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைகளை இந்த மாநாடு அலசி ஆராய்ந்து அடுத்த கட்ட நகர்வுகளை அறிவிக்க உள்ளது. சென்னை, மாதவரத்தில் உள்ள ராம லட்சுமி பாரடைஸில் டிசம்பர் 18 மற்றும் 19, 2021 ஆகிய இரு நாட்களில் நடைபெறும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள வரும் நமது மதிப்பு மிக்க விருந்தினர்களுக்கு தமிழர் கலாச்சாரத்தின் மண் மணம் மாறாத விருந்தோம்பலை வழங்கி பெருமைபடுத்த வேண்டியது நமது தலையாய கடமையாகும். சுகாதாரமான உணவு, தூய்மையான குடிநீர், வருகின்ற விருந்தினர்களுக்கு தங்குமிட வசதி மற்றும் சிக்கலில்லாத போக்குவரத்து ஏற்பாடு போன்றவற்றை ஏற்பாடு செய்து தரும் பொறுப்பை நமது வட, தென்சென்னை மாவட்ட மையங்கள் ஏற்றுள்ளது.

அரசு ஊழியர்கள் நலன் மட்டுமல்லாது சமுதாய நோக்கத்திற்காகவும் நடத்தப்படும் இந்த இரண்டுநாள் மாநாட்டின் விருந்தோம்பல் மற்றும் விழா செலவினங்களுக்கு ஆகும் தொகைகளை தோழமை சங்கங்கள் தங்கள் சக்திக்கு ஏற்ப ஏற்றுக்கொண்டு, "இந்த மாநாடு அனைத்து அரசுத்துறை சங்கங்களின் பங்களிப்புடன் சிறப்புற நடந்தது'' எனும் பெயரை ஏற்படுத்தி தர வேண்டும்.

எனவே ஊழியர்கள் ஒவ்வொருவரும், தோழமைச் சங்க நிர்வாகிகளும் மாநாட்டின் செலவுகளுக்காக பிரிவு வாரியாக வரையரை செய்யப்பட்டுள்ள நிதிகளில் ஏதேனும் ஒன்றுக்கான பொறுப்பை தாங்களோ அல்லது தங்களுக்கு தெரிந்த நிறுவனங்களிலிருந்து நிதியுதவி பெறுவதன் மூலமாகவோ வரவேற்புக் குழுவிற்கு அளிக்கக் கேட்டுக் கொள்கிறோம். மாநாட்டுக்கு வந்தவர்கள் வயிறாற உண்டு, கண்ணாறக் கண்டு, காதாறக் கேட்டு, வாயாற நம்முடைய விருந்தோம்பலை பாராட்டிச் செல்லும் காட்சியே 14ஆம் மாநில மாநாட்டை நாம் பொறுப்புடனும் பெருமையுடனும் நடத்தியதற்கு சான்றாகும்.

**எனவே தோழர்களே நமது சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டுக்கு அலைகடலென திரண்டு வாரீர். நுரை ததும்ப அகமகிழ்ந்து, நிதியுதவி தாரீர்.**

**விட்டுக்கொடுக்காத உரிமைக்கான ஒற்றை கோரிக்கை மாநாட்டை வெற்றி மாநாடாக் கிட ஒன்றிணைவோம் உறுதியோடு!**

■

# இந்திய தேசம் விற்பனைக்கு அல்ல!
# தேசத்தையே முதலாளிகளுக்கு விற்கும் ஒன்றிய அரசு

**தே**சத்தின் சொத்துக்களை ஒட்டுமொத்தமாக சூறையாடும் நோக்கத்துடன் ஒன்றிய அரசு (பாஜக) அறிமுகப்படுத்தியுள்ள திட்டம்தான் மிகவும் கயமைத்தனமான கார்ப்பரேட் நண்பர்களுக்கு அடிமாட்டு விலைக்கு தாரைவார்க்கும் திட்டம்தான் தேசிய பணமாக்கல் திட்டம் (National Moratisation Pipeline - NMP).


தேசிய பணமாக்கல் திட்டம் என்ற பெயரில் இந்திய பொருளாதாரத்தின் அடிப்படை கட்டுமானங்களாக உள்ள 13 துறைகளின் லாபம் கொழிக்கும் சொத்துக்களை எல்லாம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கு விற்றுத் தீர்ப்பது என்ற ஒன்றிய அரசின் (மோடி) நடவடிக்கைகளுக்கு இந்திய தொழிற் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் கடுமையான கண்டனம் தெரிவிக்கிறது.

இந்த திட்டம் சர்வதேச நிதி முலதனத்தால் இயக்கப்படுகிற நவீன தாராளமயக் கொள்கையின் அடுத்த மிகப்பெரிய நடவடிக்கையாகும். தேசிய பணமாக்கல் திட்டம் என்பது பொதுச் சொத்துக்களை தனியார் கைகளுக்கு மாற்றி விடும்போது மிகப் பெரும் அளவிற்கு ஊழல் பெருக்க எடுத்து ஓழுவதற்கான திட்டமே ஆகும். இந்த தேசத்தை அழித்து ஒழிக்கும் ஒரு திட்டமாகும். தொழிலாளர் மற்றும் உழைக்கும் மக்களுக்கு தாங்கமுடியாத துன்பங்களை கொண்டு ஒரு திட்டமாகும்.

ஒன்றிய அரசின் நிதி அமைச்சர் ஆகஸ்ட் 23ஆம் தேதி அறிவிக்கப்பட்டுள்ள தேசிய பணமாக்கல் திட்டமானது 26,700 கிலோ மீட்டர் உள்ள தேசிய நெடுஞ்சாலை தனியார் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு தாரை வார்க்கும் அம்சத்தை கொண்டு வந்துள்ளது. இந்த சாலைகளின் மதிப்பு 1.6 லட்சம் கோடி ஆகும். அதே போல் 400 ரயில் நிலையங்கள் மற்றும் 150 ரயில்கள் (ரூ. 1.5 இலட்சம் கோடி), 42,300 மின் திட்ட கிலோ மீட்டர் தூரம் மின்சார பகிர்மான ரயில்கள் (0.67 லட்சம் கோடி), 5 ஆயிரம் மெகாவாட் நீர்மின் சூரிய ஒளி மற்றும் காற்றாலை மின்சார உற்பத்தி சொத்துக்கள் (0.32 லட்சம் கோடி), 8 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் உள்ள தேசிய இயற்கை எரிவாயு பைப்லைன்கள் (ரூ. 24 லட்சம் கோடி), 4 ஆயிரம் கி.மீ. இந்தியன் ஆயில் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் பைப் லைன்கள் (0.22 லட்சம் கோடி), பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் தொலைத்தொடர்பு கோபுரங்கள் (ரூ.39 லட்சம் கோடி), 21 விமான நிலையங்கள் மற்றும் 31 துறைமுகங்கள் (ரூ.34 லட்சம் கோடி), 160 நிலக்கரி சுரங்கத் திட்டங்கள் (ரூ.0.32 லட்சம் கோடி) மற்றும் 2 விளையாட்டு மைதானம் (ரூ.0.11 லட்சம் கோடி) உள்ளிட்ட மாபெரும் சொத்துக்களை தனியார் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு தாரை வார்க்க இருக்கிறார்கள். (உதாரணம் 1990க்கு பிறகு தாராளமயக் கொள்கை திணிக்கப்பட்டதிலிருந்து படிப்படியாக இது வேகம் பெற்றது. வாஜ்பாய் ஆட்சியின் போது பொதுத்துறை விற்பனைக்கு என்றே தனித்துறை உருவாக்கப்பட்டு அருண் ஷோரி என்பவர் அமைச்சராகப்பட்டார்).

கடந்த 30 ஆண்டுகளாக தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள், பொதுமக்களும் பல போராட்டங்கள் நடத்தி இந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டு வந்துள்ளார்கள். ஆனால் ஒன்றிய அரசு (மோடி) எதை வேண்டுமானாலும் செய்வார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது.

ஒட்டுமொத்தமாக ரூ. 6 லட்சம் கோடி அளவிற்கான தேசிய வளங்களை தனியாருக்கு விற்பது என அதிகாரப்பூர்வமாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் உயிர்நாடியாக திகழ்கிற அடிப்படை கட்டமைப்பு சொத்துக்களையெல்லாம் தனியார் கார்ப்பரேட் கம்பெனிகள் கொள்ளை லாபத்திற்காக அடிமாட்டு விலைக்கு அள்ளித் தருகிற ஒரு திட்டமிட்ட நாசகர நடவடிக்கையே ஆகும். இன்று அடுத்தடுத்து பல திட்டங்களை கொண்டு வர இருக்கிறார்கள்.




ஒன்றிய அரசின் நிதி அமைச்சர், நிதி

ஆயோக் அமைப்பு நாட்டின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேலும் வளர்ப்ப தற்காகவே இத்தகைய விற்பனையை மேற் கொள்வதாக கூறியிருப்பது முற்றிலும் மோசடியானது. அவர்கள் கூறுவதற்கு மாறாக இது தங்களது கார்ப்பரேட் எஜமானர்கள் கொழுத்த வருமானம் ஈட்டுவதற்காகத்தான் இந்த மாபெரும் தேசிய அடிப்படைக் கட்டமைப்பு சொத்துக்களை விற்க இருக்கிறார்கள். அந்த எஜமானர்கள் இந்த நிறுவனங்களில் எந்தவொரு சிறு மூலதன நிதியும் செலவழிக்காமல் பெரும் லாபத்தை ஈட்டப் போகிறார்கள். இது தேசத்தின் வளங்களை பகிரங்கமாக சூறையாடுவதைத் தவிர வேறல்ல.

ஒன்றிய அரசு அடிப்படை கட்டமைப்பு சார்ந்த துறைகளில் முதலீடுகள் செய்வதற்கு பதிலாக வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட தனியார் நிறுவனங்கள் தேசிய பணமாக்கல் திட்டத்தின் வழியாக பெரும் நிறுவனங்களை தங்கள் வசப்படுத்துகிறார்கள். தேசத்தின் அடிப்படை சொத்துக்களாக இருக்கட்டும், பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துக்களை பணமாக்கு கிறோம் என்ற பெயரில் நடக்கும் இந்த சுரண்ட லின் மூலம் மிகப்பெரும் அளவிலான செல்வம் தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களின் கைகளுக்கு சென்று விடும்.

ஒன்றிய அரசு முதலில் வெளியிட்டுள்ள அறிவிப்பினைத் தொடர்ந்து அடுத்தடுத்து பல சலுகைகள் அறிவிக்கப்படுவது உறுதி. கடந்தகால அனுபவங்கள் இதைத்தான் காட்டுகின்றன. முதலில் வெளியிட்ட அறிவிப்புக்கு தனியாரிட மிருந்து ஆதரவு கிடைக்கப் பெறவில்லை என்று கூறி சொத்துக்களை வாங்குவோரை ஈர்ப்பதற்காக விதிகளை மேலும் தளர்த்தி புதிய புதிய அறிவிப்புகள் ஒன்றிய அரசு வெளியிடும் என்று தெரிகிறது.

பொதுத்துறை சொத்துக்கள் தனியாருக்கு 25 ஆண்டு குத்தகைக்கா? மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் நாகநாதன்

கொரோனா கொடிய நோய் தாக்குதல்கள் உலகின் பெரும்பாலான நகரங்களின் பொருளா தார வீழ்ச்சிக்கு வித்திட்டுள்ளது. பொருளாதார சரிவை கட்டுப்படுத்த பல நாடுகளில் பல விதமான அணுகுமுறைகள் பின்பற்றப்படு கின்றன.

மக்கள் தொகையில் இந்தியாவைவிட அதிக எண்ணிக்கையில் உள்ள சீனா சில வருடங்களுக்கு முன்பு மக்களிடம் ஏற்றத்தாழ்வை உருவாக்கும் தனியார் நிறுவனங்களின் சொத்தை கட்டுப் படுத்தும், மீட்கும் கொள்கை முடிவை அறிவித்திருக்கிறது. அதாவது தனியார் துறையின் சொத்திற்கு உச்சவரம்பு கொண்டுவர நடவடிக்கை கள் எடுக்கப்படுகின்றன. இன்றும் சீனாவில் பொதுத்துறை நிறுவனங்கள் தான் அதிகம் எண்ணிக்கையில் உள்ளன. அங்கும் பல பிரச்சனைகள் இல்லாமல் இல்லை. ஆனால் அவைகள் சீரமைப்பு செய்யப்படுகின்றன.

இந்தியாவில் நடப்பது என்ன? பிரதமர் நேரு காலத்தில் உருவாக்கிய பொதுத்துறை கட்டமைப் புகள் சிதைக்கப்படுகின்றன. அதன்பிறகு வந்த காங்கிரஸ்காரர்களுக்கு தனியார் மயமாக்கும் திட்டத்தில் பங்கு உண்டு. மோடி ஆட்சியில் உச்சத்திற்கு சென்றுள்ளது.

திட்டக்குழு துணைத் தலைவர் சொல்கிறார் பொதுத் துறையையும் அதன் சொத்துக்களையும் தங்களுக்கு நெருக்கமான பெரும் முதலாளி களுக்கு தாரைவார்த்துக் கொடுக்க முயற்சி செய்வதை இன்றைய காங்கிரஸ் தலைமை சுட்டிக்காட்டியதற்கு ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அளித்துள்ள பதிலில் முழுக்க முழுக்க தரம் தாழ்ந்து வரும் பாஜக அரசின் ஒரு அடையாளம் என்கிறார்.

பொதுத்துறை சொத்துக்களை பெரும் முதலாளிகளுக்கு குத்தகை விடுவது சரி என்றால் அடுத்தகட்டமாக அரசு நிர்வாகத்தை தனியாருக்கு 25 ஆண்டுகள் குத்தகைக்கு விடுவார்களா? நாட்டின் மக்களுக்கு பொறுப்புடன் பதிலளிக்க வேண்டிய ஒன்றிய அரசின் நிதியமைச்சர், பாஜக - காங்கிரஸ் அரசியல் சண்டையாக மாற்றும் செயல் கண்டனத்திற்கு உரியது. நீங்கள் யாருக்கு பொதுத்துறை சொத்துக்களை குத்தகைக்கு விடுவதாக முடிவு செய்துள்ளீர்களோ அந்த முதலாளிகள் கடந்த கால நிகழ்வு அவர்கள் செயல்கள் எத்தகையது என்பதே செய்திகளாக வெளிவருகிறது.

அமெரிக்க நாட்டின் இலக்கிய படைப்பாளி வில்லியம் யில்க்குளரின் கருத்து இங்கு பொருத்தமாக அமைகிறது.

“கடந்த காலம் ஒருபோதும் இறந்தது இல்லை. அதை கடந்த காலம் என்று கூறமுடியாது” நமது நாட்டில் 75 ஆண்டுகால தனியார் துறை நாட்டிற்கு செய்த நன்மைகள் என்ன? தீமைகள் என்ன? என்று பார்க்க வேண்டும் அல்லவா (உ-த தனியார் துறையில் இயங்கி வந்த ஆயுள் காப்பீட்டு துறையை 1956ஆம் ஆண்டு ஜுன் திங்களில் அரசு நாட்டுடமை ஆக்கியது ஏன்? இந்திரா காந்தியின் கணவர் பெரோஸ் காந்தி 1955ஆம் ஆண்டு தனியார் காப்பீடு கழகத்தில் நடந்த மோசடிகளை நாடாளுமன்றத்தில் உரிய விபரங்களுடன் வெளிப்படுத்தினார். விசாரணை மேற்கொள்ளப் பட்டது.

டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழின் உரிமை யாளரும், பெரும் முதலாளிகளில் ஒருவருமான சச்சின் தேவ் கேக்கா பல லட்சம் கோடி ரூபாய் மோசடி செய்து கண்டுபிடிக்கப்பட்டு 2 ஆண்டு சிறை தண்டனை அளிக்கப்பட்டது.

நாட்டுடமையாக்கப்பட்ட இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் நாட்டிற்கு என்ன தந்தது? 2வது ஐந்தாண்டு திட்டத்தில் இந்திய காப்பீட்டு கழகம் வழங்கிய நிதி ரூ.184 கோடி. 3வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.285 கோடி, 4வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.1,530 கோடி, 5வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.2,942 கோடி, 6வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.7,140 கோடி, 7வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.12,969 கோடி, 8வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.55,097 கோடி, 9வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.1,70,929 கோடி, 10வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.3,94,799 கோடி, 11வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.7,047,720 கோடி, 12வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.14,23,055 கோடி.

ஐந்தாண்டு திட்டத்திற்கு மூடுவிழா மோடி அரசால் நடத்தப்பட்ட பின்பு 2017-2022ஆம் ஐந்தாண்டில் ரூ. 28,01,483 கோடி வழங்கியுள்ளது. பல கோடிக்கணக்கான நபர்கள் தங்களின் சேமிப்பை அளித்துள்ளார்கள். பல்லாயிரக்கணக் கானோர் பணிபுரிகிறார்கள். பங்கு தனியாருக்கு விற்கும்போது இவர்களிடம் கருத்து கேட்டுத் தானே நிதி தொடர்பான கொள்கை முடிவு எடுக்க வேண்டும். அதுதான் மக்கள் ஜனநாயகம்.

1991 ஆண்டுக்கு பிறகு தாராளமயமாக்கல், தனியார் திட்டத்தை பயன்படுத்தி பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கு வதற்கு வழிகள் வகுக்கப்பட்டன. பல பொதுத் துறை நிறுவனங்கள் சான்றாக பிஎஸ்என்எல் நிறுவனத்திற்கு 3ஜி, 4ஜி தொழில்நுட்ப வசதிகளை வேண்டுமென்றே வழங்கப்பட வில்லை. இதற்கு மாறாக அம்பானி நிறுவனத்தின் விளம்பரத்தில் பிரதமர் மோடியே நின்றார். பிரெஞ்சு ரஃபேல் போர் விமானங்கள் வாங்குவதில் கூட்டாளியாக பெங்களூரில் இயங்கி வரும் பொதுத்துறை நிறுவனம் எச்டிஎல் நிறுவன ஒப்பந்தத்தில் இணைத்துக் கொள்ள வேண்டுகோள் விடுத்தபோது தொழில்நுட்ப அனுபவம் இல்லாத அம்பானி நிறுவனத்தை இணைத்துக் கொண்டு அதிக விலை கொடுத்து போர் விமானம் வாங்கப்பட்டது. விசாரனை நடந்து கொண்டுள்ளது. தனியார் பெரு நிறுவனங்கள் தானே இன்றைய ஆட்சியாளர் களின் உற்ற தோழன். இவர்கள்தானே குத்தகைதாரர்கள்.

பொதுத்துறை வங்கிகளை சூறையாடியவர்கள் யார்? எப்படி தப்பி ஓடினார்கள்? வரி ஏய்ப்பு, வங்கி மோசடி, பங்குச்சந்தை மோசடிகளுக்கு காரணனமாக இருப்பவர்கள் யார்?

கடந்த 75 ஆண்டு காலமாக பொதுத்துறை நிறுவனம், தங்கள் மாநிலங்களில் அமைய வேண்டும் என்பதற்காக ஏழை சிறு குறு நடுத்தர குடிமக்களிடமிருந்து பெறப்பட்ட நிலங்களை சொத்து மதிப்பு பல மடங்கு உயர்ந்துள்ள நிலையில், 25 ஆண்டுகள் குத்தகை விடுவது அப்பட்டமான மக்கள் விரோத செயல்கள் அல்லவா? உ-த உதகை மலைத் தொடர் வண்டியும் இத்தகை பட்டியலில் உள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

பொதுத்துறை சொத்துக்களை தனியார் முதலாளிகளுக்கு அதுவும் மோசடியே செய்யும் முதலாளிகளுக்கு தாரை வார்ப்பது கூட்டாட்சி தத்துவத்திற்கும், அரசமைப்புச் சட்டத்தில் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ள சோசலிச கொள்கைகளுக்கும், மக்களாட்சி மாண்பிற்கும் முற்றிலும் விரோதமானதாகும். இன்னும் மூன்று ஆண்டுகளில் பாஜக ஆட்சியின் பொது சொத்துக்களை முதலாளிகளுக்கு குத்தகை விடுவது சட்ட தார்மீக நெறிகளை அப்பட்டமாக மீறும் சர்வாதிகார செயலாகும் அல்லவா என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## வேலையின்மையால் தற்கொலைகள்

நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. விபரம் - 2016 - 2298, 2017ல் - 2404. 2018ல் - 2741, 2019ல் - 2861. இது வெறும் எண்களல்ல. ஒன்றிய மோடி அரசின் வளர்ச்சியின் அடையாளம்? ஆம். வேலையின்மையின் கொடூரத்தால் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொண்ட உயிர்களின் எண்ணிக்கை. 2016 முதல் 2017 வரை நான்கு ஆண்டுகளில் 10,294 பேர் வேலையின்மையால் தற்கொலை செய்து கொண்டதாக ஒன்றிய அரசு கூறுகிறது. நாடு முழுதும் பதிவான வழக்குகளை தொடுக்கும் தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் புள்ளி விவர அடிப்படையில் இந்த தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது. பெரும்பகுதி தற்கொலைகள் குறித்த வழக்குகள் பதிவு செய்யப்படுவதில்லை என்ற நிலையில் உண்மை எண்ணிக்கை இதைவிட பல மடங்கு அதிகமாகவே இருக்கும்.

2014 நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக ஆட்சிக்கு வந்தால் 2 கோடி பேர் வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் பணமதிப்பு நீக்கம், ஜிஎஸ்டி வரி என இவட்கள் முட்டாள் தனமான நடவடிக்கைகளால் இருந்த வேலை வாய்ப்புகளும் பறிபோனது. இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின் (Centre for Monitoring Indian Economy) மதிப்பீடுகளின்படி பணமதிப்பு நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்ட 2016 நவம்பர் மாதத்தில் 1.29 கோடி பேர் வேலை இழந்தார்கள். CMIE மதிப்பீடுகளின்படி வேலையின்மை ஏப்ரல் 2021ல் 8 சதவீதமாக இருந்தது. தற்போது 11.9% அதிகரித்துள்ளது. 2021 ஜனவரி முதல் மே மாதம் வரை 2.53 கோடி பேர் வேலை இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

கொடிய கொரோனா பெருந்தொற்று பரவலை தடுப்பதற்கு என்று சொல்லி ஒன்றிய அரசால் அமலாக்கப்பட்ட ஊரடங்கு மக்களின் பொருளா தாரத்தை மிகப்பெரிய அளவில் பாதித்துள்ளது. ஏற்கனவே தங்களிடமிருந்து சேமிப்புகளைக் கொண்டு முதன் அலை காலத்தை சமாளித்த மக்கள் இரண்டாவது அலை காலத்தில் கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டனர். தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்குவதற்கே யோசிக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். இதன் விளைவாக பொருட் களுக்கான தேவை பெரிய அளவில் குறைந்துள்ளது.

ஏற்கனவே மூலப்பொருட்களின் விலை உயர்வு, இடுபொருள் செலவு அதிகரிப்பு, ஜிஎஸ்டி வரி போன்றவற்றால் நடுத்தர மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள போராடிக் கொண்டிருக் கின்றன. பொருட்கள் தேவை அதிகரிப்பதன் மூலம் மட்டுமே உற்பத்தியை அதிகரிக்கக் முடியும். உற்பத்தி அதிகரித்தால்தான் வேலை வாய்ப்புகள் பெருகும்.

இத்தகைய சூழலில்தான் ஒன்றிய அரசு வருமான வரி வரம்புக்குள் வராத குடும்பங் களுக்கு மாதம் ரூ. 7500 வழங்கிட வேண்டும் என்கிற கோரிக்கை முக்கியத்துவம் பெறுகிறது. கார்ப்பரேட் முதலாளிகளுக்கு வரிச்சலுகை, கடன் தள்ளுபடி என பல லட்சம் கோடி கடனை வாரிக் கொடுத்த ஒன்றிய அரசு (மோடி) ஒட்டுமொத்த இந்திய மக்களின் மேம்பாட்டிற்காக கிள்ளிக் கொடுப்பதற்கும் தயாராக இல்லை.

ஒரு பக்கம் அரசு மற்றும் அரசுத் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவது, மறுபக்கம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக் குவது என நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மட்டுமே வேலையின்மை எனும் பேரிடரிலிருந்து மக்களை மீட்க முடியும். அதற்கான எந்த நடவடிக்கையும் ஒன்றிய அரசு மேற்கொள்ளாது என்பது கசப்பான உண்மை.

எனவே தோழர்களே ஒன்றிய பாஜக அரசின் இத்தகைய மக்கள் விரோத, தேச விரோத சட்டத்தை கடுமையாக கண்டனம் செய்வதற்கும், நமது சங்கத்தின் வட்ட, மாவட்ட மாநாடுகளில் மிக எழுச்சியுடன் நடத்திடவும், அதில் பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றிட வேண்டும். வருகின்ற காலங்களில் ஒன்றிய பாஜக அரசின் தேச விரோத திட்டத்தை கடுமையாக கண்டனம் செய்வதற்கும், தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை உறுதியாக போராடி உரிமைகளை தக்க வைப்பதற்கும் அனைத்துதரப்பு மக்களுடன் இணைந்து ஒன்றுபட்டு குரல் எழுப்பி தேசத்தை பாதுகாப்போம்.

■

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

# 14ஆம் மாநில மாநாடு

**2021 டிசம்பர் 18,19. சென்னை**

இது நம்ம மாநாடு!
உரிமை சாசன பொன்ஏடு!

## விருந்தோம்பலும், மாநாடு ஏற்பாடுகளும் நம்மை பெருமை படுத்தட்டும் நன்மைகளை பெற்றுத்தரட்டும் !

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாடு சென்னையில் டிசம்பர் 18 மற்றும் 19 தேதிகளில் நடைபெறும் என மாநில மையம் அறிவித்து அதற்கான ஆயத்தப்பணிகளை முடுக்கிவிட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா ஏற்படுத்திய பாதிப்புகள் ஏழை எளிய மக்களை மட்டுமல்ல அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் என அனைத்துப் பிரிவினரையும் கடுமையாக பாதித்துள்ளதை நாமனைவரும் அறிவோம். அரசு ஊழியர்களில் ஒரு பகுதியினர் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு மக்களுக்கான சேவையில் தங்கள் இன்னுயிரையும் பொருட்படுத்தாது சிறப்பாக பணியாற்றி மக்களின் மனம் கவர்ந்திருக்கிறார்கள். சிலர் தங்கள் இன்னுயிரையும் இழந்திருக்கிறார்கள். நிர்வாகிகளில் பலபேர் மாநில மையத்தின் அறிவிப்பிற்கிணங்க அந்தந்த பகுதிகளில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோருக்கு அன்றாட பயன்பாட்டிற்கான அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட உணவுப் பொருட்களும், உணவுப் பொட்டலங்கள் மருந்துகள் போன்றவற்றை வழங்கியுள்ளனர். அனைத்து அரசு ஊழியர்களும் தங்கள் ஒருநாள் சம்பளம், கொரோனா நிவாரணம் போன்றவற்றை அரசுக்குக் கொடுத்து உதவியுள்ளனர். கொரோனா காலத்து கொடுமையை தமிழக அரசு உறுதியுடன் எதிர்கொள்வதற்காக அரசு ஊழியர்கள் தங்களது அகவிலைப்படி உயர்வு, சரண்விடுப்பு போன்றவற்றை விட்டுக்கொடுத்து அந்த வகையில் அரசுக்கு ஆதரவாக இருந்துள்ளோம்.

தற்போது கொரோனா பெருந்தொற்று கட்டுக்குள் வந்திருக்கும் நிலையில் நம்முடைய உரிமைகளில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. புதிய ஓய்வூதியத்திட்டத்தை நீக்கி பழைய ஓய்வூதியத் திட்டமே தொடர வேண்டும், சத்துணவு அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் அவர்களைப் போன்ற ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம்.பென்சன் வழங்க வேண்டும், கொரோனா பெருந்தொற்று தணிந்ததும் அகவிலைப்படி மற்றும் சரண்விடுப்பு போன்றவற்றை வழங்கிட வேண்டும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கிடும் விதமாக அரசுத் துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும் போன்ற நமது முக்கிய கோரிக்கைகள் அனைத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்கட்சித் தலைவராக இருந்தபோதே எடுத்துரைக்கப்பட்டு, அவரும் நம்முடைய கோரிக்கைகளை ஏற்று அவற்றை தேர்தல் வாக்குறுதிகளாக அறிவித்து அரசு ஊழியர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தினார். அரசு ஊழியர்களும் அந்த நம்பிக்கையை காப்பாற்றும் விதமாக திமுக ஆட்சியமைக்க வாக்களித்தோம்.

தற்போது தமிழக முதல்வர் அவர்கள் தான் அளித்த தேர்தல் வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருவதோடு, கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் கண்டிப்பாக நிறைவேற்றுவ தாகவும் உறுதி அளித்துள்ளார். எனவே அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை தேர்தல் வாக்குறுதிகளாக வழங்கி அவற்றை நிறைவேற்ற உறுதிபூண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நமது 14ஆம் மாநில மாநாட்டின் சிறப்பு விருந்தினராக அழைத்து சிறப்பிக்க மாநில மையம் முனைப்பான ஏற்பாடுகள் செய்து வருகிறது. அரசு ஊழியர்களின்பால் அக்கறையும் நம்பிக்கையும் கொண்டுள்ள முதல்வர் அவர்கள் நம்முடைய மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்க நிச்சயம் இசைவு தெரிவிப்பார் என்ற நம்பிக்கை நமக்குள்ளது. ஏற்கனவே எதிர்கட்சித் தலைவராக இருந்த போது நம்முடைய மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பு சேர்த்துள்ள முதல்வர், இந்த மாநில மாநாட்டிலும் கலந்து நமக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிப்பார் என்ற நம்பிக்கையும் நம்மிடம் உள்ளது. அவரும் மாநாட்டில் பங்கேற்று சிறப்பிப்பார் என்ற நம்பிக்கை நமக்குள்ளது. தமிழகத்தில் அரசுத் துறைகளில் உள்ள 60க்கும் மேற்பட்ட சங்கங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்தும் இந்த மாநில மாநாடு அகில இந்திய அளவில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மாநாட்டு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

மேலும் மத்திய மாநில அரசு, பொதுத்துறை, வங்கித்துறை, காப்பீட்டுத்துறை, இரயில்வே, ஆசிரியர்கள் அமைப்பு மற்றும் டெலிகாம் நிறுவனத்தின் சார்பில் அதன் தொழிற்சங்க தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு நம்முடைய உரிமைகள் வெல்ல உரை நிகழ்த்தி வாழ்த்திப்பேசிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அரசுத்துறை ஊழியர்கள் மற்றும் நாட்டு பொதுநலன் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைகளை இந்த மாநாடு அலசி ஆராய்ந்து அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுக்க உள்ளது. சென்னை, மாதவரத்தில் உள்ள ராமலட்சுமி பாரடைஸில் டிசம்பர் 18 மற்றும் 19, 2021 ஆகிய இரு நாட்களில் நடைபெறும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவரும் நமது மதிப்பு மிக்க விருந்தினர்களுக்கு தமிழர் கலாச்சாரத்தின் மண் மணம் மாறாத விருந்தோம்பலை வழங்கி பெருமை படுத்த வேண்டியது நமது தலையாய கடமையாகும். சுகாதாரமான உணவு, தூய்மையான குடிநீர், வருகின்ற விருந்தினர்களுக்கு தங்குமிட வசதி மற்றும் சிக்கலில்லாத போக்குவரத்து ஏற்பாடு போன்றவற்றை ஏற்பாடு செய்து தரும் பொறுப்பு சென்னையில் உள்ள மாவட்ட பகுதிக்குழு நிர்வாகிகள் மற்றும் சென்னை அலுவலகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களுடையதாகி இருக்கிறது.

அரசு ஊழியர்கள் நலன் மட்டுமல்லாது சமுதாய நோக்கத்திற்காகவும் நடத்தப்படும் இந்த இரண்டுநாள் மாநாட்டின் விருந்தோம்பல் மற்றும் மாநாட்டு செலவினங்களுக்கு ஆகும் நிதியுதவி மற்றம் பொருளுதவிகளை தோழமை சங்கங்கள் தங்கள் சக்திக்கு ஏற்ப ஏற்றுக்கொண்டு, "இந்த மாநாடு அனைத்துத்துறை சங்கங்களின் பங்களிப்புடன் சிறப்புற நடந்தது" எனும் பாராட்டை பெற நாம் அனைவரும் கடமையாற்றிட வேண்டும்.

எனவே ஊழியர்களும், சங்க நிர்வாகிகளுமாகிய நாம், மாநாட்டின் செலவுகளுக்காக பிரிவு வாரியாக வரையறை செய்யப்பட்டுள்ள நிதிகளில் ஏதேனும் ஒன்றுக்கான பொறுப்பை நாமோ அல்லது நமக்குத் தெரிந்த நபர்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து நிதியுதவி பெறுவதன்மூலமாகவோ இந்த மாநாடு வெகு சிறப்பாக நடந்திட நம்முடைய பங்களிப்பைச் செய்வோம். மாநாட்டுக்கு வந்தவர்கள் வயிரார உண்டு, கண்ணாரக் கண்டு, காதாரக் கேட்டு, வாயார நம்முடைய விருந்தோம்பலை பாராட்டிச் செல்லும் காட்சியே 14ஆம் மாநில மாநாட்டை நாம் பொறுப்புடனும் பெருமையுடனும் நடத்தியதற்கு சான்றாகும்.

எனவே அன்பிற்கினிய அரசு ஊழியர்களே தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றல் என்ற ஒற்றைக் கோரிக்கையை முன்னிறுத்தி நடத்தப்படும் இந்த மாநில மாநாட்டை சீரும் சிறப்புடனும் நேரிய பொறுப்புடனும் நடத்திட அகமகிழ்ந்து நிதி உதவியும் பொருளுதவியும் செய்து மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட உங்கள் பங்களிப்பை செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம். சென்னை மாநாட்டின் விருந்தோம்பலும், மாநாட்டு ஏற்பாடுகளும் நம்மை பெருமைபடுத்தவும், நன்மைகளை பெற்றுத்தரவும் ஒவ்வொரு அரசு ஊழியரும் காரணமாக இருப்போம். இது நம்ம மாநாடு. இது நம் உரிமை சாசனத்தின் பொன்னேடு.

-வரவேற்புக்குழு

# சென்னையில் அரசு ஊழியர் சங்க 14ஆம் மாநில மாநாடு

## வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம்

**த**மிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆவது மாநில மாநாடு டிசம்பர் 18, 19 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெறுவதை யொட்டி அமைக்கப்பட்ட வரவேற்புக் குழுவுக்கு தொழிற்சங்கத் தலைவர் அ.சவுந்தரராசன் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். சென்னை திருவல்லிகேணியில் உள்ள அரசு ஊழியர்சங்க தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற வரவேற்புக்குழு கூட்டத்திற்கு வட சென்னை மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி தலைமை வகித்தார். தென் சென்னை மாவட்டச் செயலாளர் நா.வினோத்குமார் வரவேற்றார். மாநாட்டின் நோக்கங்கள் குறித்து பொதுச்செயலாளர் ஆ.செல்வம், தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் நெ.இல.சீதரன், முன்னாள் மாநில நிர்வாகிகள் இரா.ஜோதி, சு.சிவக்குமார், கே.எம்.தியாக ராஜன், ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங் கிணைப்பாளர் கு.வெங்கடேசன், மாநிலச் செயலாளர் தெ.வாசுகி, மாநில மகளிர் துணைக் குழு அமைப்பாளர் சி.பரமேஷ்வரி, வடசென்னை மாவட்டத் தலைவர் ப.சுந்தரம்மாள் ஆகியோர் பேசினர். வரவேற்புக்குழு அமைப்பு இந்த கூட்டத்தில் வரவேற்புக்குழு தலைவராக சிஐடியு மாநிலத் தலைவர் அ.சவுந்தரராசன் தேர்வு செய்யப்பட்டார். செயலாளராக சா.டேனியல், நிதி காப்பாளராக அந்தோணிசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

பின்னர் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அ.சவுந்தரராசன், “அரசு ஊழியர்களின் நலனுக்கு எதிராக செயல்படும் எந்த அரசும் அரசியல் நெருக்கடியை சந்திக்கும்” என்றார். பழைய ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என்று நாடுமுழுமைக்கும் உள்ள அரசு ஊழியர்களும் போராட்டத்தில் இறங்கும் நேரம் வந்து விட்டது என்றும் அரசு ஊழியர்களின் பழைய ஓய்வூதியத்தை மீண்டும் பெற்றுக்கொடுக்கும் மாநாடாக சென்னையில் நடைபெறும் 14ஆம் மாநில மாநாடு அமையும் என்றும் அவர் கூறினார். சென்னையில் நடைபெறும் அரசு ஊழியர் சங்க மாநாட்டில் முதலமைச்சர் பங்கேற்க உள்ளார். ஊழியர்களின் கோரிகைகள் வெல்லும் என்ற நம்பிக்கையில் மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவோம், அதற்கு வலுவான ஒற்றுமையை உருவாக்குவோம் என்றும் தெரிவித்தார். அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு, “அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆவது மாநாட்டில் புதிய கோரிகைகள் எதுவும் வைக்கவில்லை. ஆட்சியாளர்கள் தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகளை நிறை வேற்ற வேண்டும் என்ற கோரிக்கை வைத்துள்ளோம்” என்றார். அரசு ஊழியர்களுக்கும்-ஆசிரியர்களுக்கும் சமூகநீதி நிலை நாட்டப்பட வேண்டும் என்ற ஒற்றை கோரிக்கை முன்வைத்து நடைபெறும் மாநாட்டை வெற்றி பெற செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார். ■



பகுத்தறிவு பகவலவன் தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளையொட்டி 17.09.2021 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தஞ்சாவூர் வட்டத்தின் சார்பாக தந்தை பெரியார் திரு உருவ சிலைக்கு மரியாதை செய்யப்பட்டது. தஞ்சை மாவட்டத் தலைவர் தோழர் கோதண்டபாணி மாலை அணிவித்தார். 50- க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். ■

# சட்டமன்ற பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிக்கை



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களின் உற்ற நண்பனாக அவர்களது உரிமைகளையும் சலுகைகளையும் வழங்கும் தோழனாக என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது. பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற அரசுகள் அறிவித்து செயல்படுத்திய, அரசு ஊழியர்களுக்கான நலத்திட்டங்கள் எண்ணற்றவை; இந்த நாட்டிற்கே வழி காட்டுபவை.

அந்த வகையில் அண்மையில் பல்வேறு அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் அரசிடம் வைத்த கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து, பின்வரும் முக்கிய அறிவிப்புகளை 110 விதியின் கீழ் வெளியிட விரும்புகிறேன்.

(1) அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு குறித்து நிதிநிலை அறிக்கையில் 1.4.2022 முதல் அமல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து வரப்பெற்ற அரசு ஊழியர்கள் சங்கங்களின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து இந்த அரசுக்குக் கடும் நெருக்கடியான நிதிச்சூழல் இருப்பினும், அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, அறிவிக்கப்பட்ட நாளுக்கு மூன்று மாத காலத்திற்கு முன்னதாகவே அதாவது 1.1.2022 முதல் அகவிலைப்படி உயர்வு அமல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் 16 இலட்சம் அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இவ்வாறு அறிவிக்கப்பட்ட காலத்துக்கு முன்னரே அகவிலைப்படி உயர்வினை அமல்படுத்துவதால், மூன்று மாத காலத்திற்கு ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும். ஆண்டொன்றுக்கு கூடுதலாக 6 ஆயிரத்து 480 கோடி ரூபாய் செலவாகும்.

(2) சத்துணவு மையங்களில் பணிபுரியும் சத்துணவு சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்கள் ஆகியோரின் ஓய்வு பெறும் வயது 58-லிருந்து 60-ஆக உயர்த்தப்படும். இதன்மூலம் தற்போது பணியிலிருக்கும் 29 ஆயிரத்து 137 சமையலர்களுக்கும், 24 ஆயிரத்து 576 சமையல் உதவியாளர்களும் பயன்பெறுவார்கள்.

(3) அரசுப் பணியாளர்கள் தங்கள் பணிக் காலத்தில் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வு 2020ஆம் ஆண்டு இரத்து செய்யப்பட்டது. அரசுப் பணியாளர்கள் பெற்றிடும் கூடுதல் கல்வித்தகுதியின்மூலம் அவர்களுடைய பணித்திறன் மற்றும் அவரது செயல்பாடுகள் மேம்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, உயர் கல்வித் தகுதிகளுக்கான ஊக்கத் தொகை ஒன்றிய அரசால் அண்மையில் அறிவித்துள்ள வழிகாட்டு முறைகளின் அடிப்படையில் விரைவில் அறிவிக்கப்படும்.

(4) அரசு பள்ளிகளில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடங்கள், தேவைக்கேற்ப தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாக நிரப்ப விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(5) ஓய்வு பெறும் நாளில் அரசுப் பணியாளர்கள் தற்காலிக பணிநீக்கத்தில் வைக்கும் நடைமுறை தவிர்க்கப்படும்.

(6) 2016, 2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் முந்தைய அரசுக்கு எதிராக அரசு ஊழியர்கள் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டங்கள் தொடர்பாக பல்வேறு சங்கங்கள் தங்கள் வேலை நிறுத்த காலம் மற்றும் தற்காலிக பணிநீக்க காலத்தை பணிக்காலமாக முறைப்படுத்த வேண்டுமென கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதனை பரிவுடன் பரிசீலித்து, பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுடைய வேலைநிறுத்தக் காலம் மற்றும் தற்காலிக பணிநீக்க காலம் ஆகியவை பணிக்காலமாக முறைப்படுத்தப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

(7) வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது பணியிட மாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை அதே இடத்தில் மீண்டும் பணியமர்த்தும் வகையில் கலந்தாய்வின்போது அவளுக்கான உரிய முன்னுரிமை வழங்கப்படும். மேலும் போராட்ட காலத்தில் அவர்கள்மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்படும். அந்த ஒழுங்கு நடவடிக்கை காரணமாக பதவி உயர்வு ஏதேனும் பாதிக்கப்பட்டிருந்தால் அவையும் சரிசெய்யப்படும்.

(8) பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் பணி பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை நீக்கும் வகையிலும், கருணை அடிப்படையிலான நியமனங்கள் குறித்து தற்போது நடைமுறையில் உள்ள தெளிவின்மை சரி செய்யும் வகையிலும் உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும்.

(9) அரசு பணியாளர்களுக்கான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ஊழியர்களைச் சார்ந்து வாழும் மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோரை அவர்களது வயது வரம்பினைக் கருத்தில் கொள்ளாமல் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்படும். மேலும் அரசு ஊழியர்கள் இத்திட்டத்தின்கீழ் இடர்பாடுகள் எதுவுமின்றி பயன்பெற ஏதுவாக அவர்களுக்கு உதவிடும் வகையில் ஒருங்கிணைந்த தனி தொலைபேசி உதவி மையம் (Help Desk)) ஒன்று அமைக்கப்படும்.

(10) மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ஊழியர் சங்கங்களால் கொரோனாவுக்கான சிகிச்சைகளை உயர் சிகிச்சை பிரிவில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை அளிக்கப்பட்டுள்ளது. அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள சிகிச்சை தொகையான 10 இலட்சம் ரூபாயைவிடவும் கூடுதலாக கொரோனா சிகிச்சைக்கான செலவு தொகை அரசு நிதி உதவியின்கீழ் அனுமதிக்கப்படும்.

(11) கணக்கு மற்றும் கருவூலத் துறையின் (IFHRMS) பணிகளை எளிதாக மேற்கொள்ளும் ெபாருட்டு அவற்றைப் துரிதமாகவும், எளிதாகவும் செயல்படுத்தக் கூடிய வகையில் மாவட்டந்தோறும் பணியாளர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படும்.

(12) புதியதாக அரசுப் பணியில் சேரும் அரசுப் பணியாளர்கள் மற்றும் பதவி உயர்வு பெறும் பணியாளர்களுக்கு பணி தொடர்பான பயிற்சியினை அந்தந்த மாவட்டங்களிலேயே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் பவானிசாகர் சென்று பயிற்சி பெறும் நிலை தவிர்க்கப்பட்டு தாமதமின்றி அரசு ஊழியர்கள் உரிய காலத்தில் தங்களுக்குரிய தகுதிகாண் பருவம் முடித்தல் மற்றும் பதவி உயர்வு பெறுவது உறுதி செய்யப்படும்.

(13) அரசு பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளதால் ஆசிரியர் - மாணவர் விகிதாச்சார தேவைக்கேற்ப ஆசிரியர் பணி நியமனம் மேற்கொள்ளப்படும்.

மக்களாட்சி தத்துவத்தின் நான்கு தூண்களில் ஒன்றான நிருவாகத்தின் அடித்தளமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள். அவர்களது நலனில் எப்போதுமே அக்கறை கொண்டு அவர்களது நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு படிப்படியாக, நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றும் என்று தெரிவித்து அமைகிறேன். ■

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

பதிவு எண் : 237/84

## Tamilnadu Government Employees' Association

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண்: 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

✆ 28441286 / 28440336 பேக்ஸ் : 28443601 email : tngeastatecenter@gmail.com / web : www.tngea.org



மாநிலத் தலைவர்
மு.அன்பரசு

பொதுச் செயலாளர்
ஆ.செல்வம்

மாநில துணைத்தலைவர்கள்
மொ.ஞானத்தம்பி
ஏ.பெரியசாமி
இரா.மங்களபாண்டியன்
என்.வெங்கடேசன்
மு.சீனிவாசன்
கோ.பழனியம்மாள்

மாநில செயலாளர்கள்
இரா.ந.நம்பிராஜன்
சி.எஸ்.கிறிஸ்டோபர்
சி.பரமேஸ்வரி
உ.சண்முகம்
தெ.வாசுகி

மாநில பொருளாளர்
மு.பாஸ்கரன்


கடித எண். 28/2021

நாள்.30.09.2021

பெறுநர்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**
தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-600009

எங்கள் அன்பிற்கும், நன் மதிப்பிற்கும் உரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வீரம்செறிந்த வணக்கங்கள்.

**பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் பதவியேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசின் ஆட்சி கடந்த 150 நாட்களாக மக்களின் மனம் மகிழும் வகையில், மற்ற மாநிலங்களும் பாராட்டக்கூடிய அளவிற்கு, தமிழகத்திற்கே உரிய தனித்துவத்துடன் வீரநடை போட்டு முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டுள்ளது. வாழ்த்துக்கள்.**

மத்திய அரசுக்கு அடிபணியாத, தமிழகத்தின் உரிமைகளை விட்டுக் கொடுக்காத, சமூகநீதிக்காக, பெண்கள் முன்னேற்றத்திற்காக பாடுபடும் தங்களின் அரசு ஆட்சிக்கட்டிலில் உள்ள இந்த காலகட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாடு நடக்க இருப்பது உள்ளபடியே அனைத்து அரசு ஊழியர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தக்கூடிய நிகழ்வாகும்.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

பதிவு எண் : 237/84

## Tamilnadu Government Employees' Association

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண்: 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 5.

☎ 28441280 / 28440938 பேக்ஸ் : 28443821 email : tngeastatecenter@gmail.com / web : www.tngea.org

38 ஆண்டுகால வரலாறு உள்ள எங்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் தமிழகத்தின் முன்னாள் முதல்வரும், முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களின் உறவு பாசப்பறவைகளுக்கு ஒப்பானதாகும். எதிர்கட்சியாக இருந்தபோது அரசு ஊழியர்களின் உரிமைகளை ஆளும் அரசுக்கு அறிவுறுத்துவதும், ஆளும் கட்சியாக ஆகும்போது அரசு ஊழியர்களின் நலன்களுக்கான திட்டங்களை நிறைவேற்றித் தருவதுமாகவே அவருடைய செயல்கள் இருந்தன.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மாநாடுகளில் எதிர்கட்சித் தலைவராக அவர் கலந்து கொண்டு அரசு ஊழியர்களை ஊக்கப்படுத்தியதும், உற்சாகப்படுத்தியதும், உரிமைக்கான போரில் சமரசம் இல்லை என் று அரசு ஊழியர்கள் கொண்டிருந்த விடாமுயற்சியை பாராட்டி மகிழ்ந்ததும் இன்னும் எங்கள் மனத்திரையில் உயிர்ப்படங்களாக ஓடிக்கொண்டிருக்கிறது.

1986ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் அவர் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளின் மீது தமிழ்நாடு அரசு எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்காததைக் கண்டித்து

> **''ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக்கறக்க வேண்டும், பாடிக்கறக்கிற மாட்டை பாடிக்கறக்க வேண்டும், அடித்துக் கறக்கிற மாட்டை அடித்துக் கறக்க வேண்டும். இதில் மூன்றாவது வழியைத்தான் அரசு ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய சூழ்நிலை உள்ளது.''**

என்று கூறியதும். திமுக ஆட்சிக்கு வந்தபின்னர், சில கோரிக்கைகள் தீர்க்கப்படாமல் இருப்பது வேதனை அளிப்பதாக உள்ளதாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தெரிவித்தபோது,

> **"வேதனை என்ற வார்த்தையை இந்த அரசு இருக்கும் போது தயவு செய்து பயன்படுத்தாதீர்கள். உங்களது சங்கத்தின் கோரிக்கைகள் தொடர்பாக கலந்து பேசி இந்த அரசு தீர்க்கும்"**

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

பதிவு எண் : 237/84

## Tamilnadu Government Employees' Association

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண்: 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 5.

✆ 28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 email : tngeastatecenter@gmail.com / web : www.tngea.org


என்று நம்பிக்கை அளிக்கும் வகையில் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை தாயுள்ளத்தோடு அணுகி தீர்த்து வைப்பதில் ஆர்வம் காட்டி அரசு ஊழியர்கள் மீது அன்பும் பற்றும் உடையவராக இருந்ததையும் எந்த அரசு ஊழியராலும் மறக்க முடியாது.

தாங்களும் எதிர்கட்சித் தலைவராக இருந்த போது 2021 ஜனவரி 27 ஆம் தேதியன்று எங்களது சங்கத்தின் சார்பில் மதுரையில் நடைபெற்ற "போராட்ட ஆயத்த மாநாட்டில்" காணொளி மூலம் பங்கேற்று

**"கழக ஆட்சி அமைந்தவுடன் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்படும்."**

என்று வாக்குறுதி அளித்ததும் அரசு ஊழியர்கள் மனதில் பசுமரத்தாணியாக நினைவில் உள்ளது.

இத்தகைய சூழலில் எதிர்வரும் 2021 டிசம்பர் 18,19 தேதிகளில் சென்னையில் எங்களது சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டினை சிறப்பாக நடத்திட திட்டமிட்டுள்ளோம்.

**"ஸ்டாலின்தான் வாராரு, விடியல் தரப் போறாரு"** என்ற தேர்தல் பிரச்சார வாசகத்தை அரசு ஊழியர்கள் மத்தியில் தொடர்ந்து பிரச்சாரம் செய்து தங்கள் தலைமையிலான ஆட்சி தமிழகத்தில் ஏற்பட அரசு ஊழியர்களும் முக்கிய காரணமாக இருந்துள்ளோம் என்பதால் எங்கள் முதல்வரான தாங்கள், எங்கள் சங்க மாநில மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

**வரவேற்பின் மகிழ்வில்,**

என்றும் தோழமையுடன்!

**(மு.அன்பரசு)**
மாநிலத் தலைவர்
98401- 87508

**(ஆ.செல்வம்)**
பொதுச் செயலாளர்
94439 - 30500

# தோழர் எம்.ஆர்.அப்பன் கண்ட கனவும் 14ஆம் மாநாட்டின் சிறப்பும்

'ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்'

- மகாகவி பாரதியார்

**26**.09.2021 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழுவில் "தற்போது எல்லாத் துறைகளிலும் பெண் அரசு ஊழியர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் பெண் அரசு ஊழியர்களை சங்கப்பணிகளில் முன்னணி ஊழியர்களாகவும் நிர்வாகிகளாகவும் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கில் மாவட்டங்களில் தேர்வு செய்யப்படும் 14ஆம் மாநில மாநாட்டுக்கான பிரதிநிகளில் தேர்வு செய்யப்படும் பெண்பிரதிநிதிகள் மட்டுமல்லாது ஒவ்வொரு மாவட்டத்திலும் கூடுதலாக இரண்டு பெண் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்படவேண்டுமென வரலாற்று சிறப்புமிக்க தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. நமது ஸ்தாபனம் இதன் மூலம் மிகச் சிறந்த தொழிற்சங்கமாக பரிணமித்ததுடன் பெண் அரசு ஊழியர்கள் மத்தியில் மிகபெரிய வரவேற்பையும் பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் பெண் அரசு ஊழியர்களை அணிதிரட்டி முதன் முதலாக 3ம் மாநில மாநாட்டில் தான் மகளிர் சிறப்பு மாநாடு நடைபெற்றது. மகளிர் சிறப்பு மாநாட்டில் தோழர் எம்.ஆர் அப்பன் அவர்கள் பேசுகையில் "பெண் அரசு ஊழியர்களை அணி திரட்டாமல் அரசு ஊழியர்கள் தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளில் முன்னேற்றம் காணமுடியாது" என்றும் பெண் அரசு ஊழியர்களின் பங்கானது இயக்க வேலைகளில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்கியதுடன் பெண் அரசு ஊழியர்களை அணி திரட்டவேண்டும். அவர்களுடைய திறமைகளை வெளிக்கொணர வேண்டும் அவர்களை அறிவாற்றல் மிகுந்த தலைவர்களாக வளர்த்தெடுக்கவேண்டும். அவர்களுடைய பிரச்சினைகளில் சிறப்பு கவனம் செலுத்தி அவைகளை நிறைவேற்றி வைக்க பாடுபடவேண்டும். பெண்அரசு ஊழியர்களுடைய பிரச்சினைகளை பெண்களே பார்த்துக் கொள்ளட்டும் என்று கருதாமல் அவை தீர்க்கப்பட வேண்டிய சமூகப் பிரச்சினை என்கிற உணர்வுடன் ஆணாதிக்க மனோபாவத்திற்கு இடம்கொடுக்க கூடாது என்றும் தன்னுடைய கனவு நிறைவேற்றுகிற வண்ணம் இந்த மாநாடு சிறப்பாக நடைபெற்றிருப்பதாக நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டது மட்டுமல்லாமல் ஸ்தாபனத்தை வலுவாக கட்டமைக்க பெண்அரசு ஊழியர்களின் பங்கேற்பு அவசியம் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். கடலூரில் நடைபெற்ற 5ம் மாநில மாநாட்டில் பெண் அரசு ஊழியர்களை சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது மட்டுமல்லாமல் அவர்களை சங்க நிர்வாக பொறுப்புகளில் பங்கேற்கவைக்க கூடிய வகையில் தொடர்ச்சியான பயிற்சி அளிக்க வேண்டுமென முடிவாற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

நமது ஸ்தாபனத்தில் அரசு ஊழியர்கள் உறுப்பினர் களின் எண்ணிக்கையில் சரிபாதி பெண் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல் நமது வாழ்வாதார கோரிக்கைகளை வென்றெடுக்கக்கூடிய போராட்டக் களங் களில் வீரமிக்க பெண் அரசு ஊழியர்கள் எழுச்சியான பங்கேற்பு தொடர்ந்து அதிகரித்து வருவது என்பது நமது ஸ்தாபனம் தனது இலட்சியப் பாதையிலே சரியான இலக்கை நோக்கி பீடுநடை போட்டுக்கொண்டிருக்கிறது என்பது மிகையாகாது. நமது அருமை ஆசான்அன்புத் தோழர் எம்.ஆர் அப்பன் அவர்களின் இலட்சியமும், கண்ட கனவையும் நிறைவேற்றும் விதமாக சென்னையில் டிசம்பர் 18 மற்றும் 19ல் நடைபெறவுள்ள நமது 14ஆம் மாநில மாநாடு அமையும் என்பது உறுதி. எவ்வகை இடர்வரினும் இயக்கப்பதாகையினை நெஞ்சில் நிறுத்தி வெற்றிப் பாதையில் வீரநடை போடுவோம்.

**- தெ.வாசுகி**

**இரத்த தானம் செய்வோம்! உயிர்களைக் காப்போம்!**

# குறித்தான அமைப்பு விதிகளின்படியான ஸ்தாபன வழிகாட்டு நெறிமுறைகள்

1. மாவட்ட மாநாட்டில் 2021ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் பட்டியலை மாநிலத்தில் இரு நகல்களில் ஒப்படைத்து ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

2. மாநில செயற்குழு முடிவின்படி பிரதிநிதி தோழர்களுக்கு இலக்கு நிர்ணயித்து அரசு ஊழியர், எம்ப்ளாயீஸ் போரம் சந்தாக்களை முகவரி மற்றும் மாநிலத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவற்றை மாவட்ட மாநாட்டில் பங்கேற்க வரும் மாநில நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

3. வட்ட மாநாடுகள் அனைத்தும் மாவட்ட மாநாடுகளுக்கு முன்னர் முடித்திட வேண்டும்.

4. வட்ட மாநாடுகளில் செயலாளர் அறிக்கை மற்றும் வரவுசெலவு அறிக்கைகளுக்கு ஒப்புதல் பெறப்படுவதுடன் அமைப்பு விதி 10.1.1.ன்படி வட்டக்கிளைகளில் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட வேண்டும். மேலும் விதி எண்.22.5.ன்படி வட்ட மாநாடுகளில் குறைந்தபட்சம் 25 உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும். வட்டத்தில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களில் 25 பேருக்கு ஒருவர் வீதம் மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும்.

5. மாவட்ட மாநாடுகள் கொரோனா பெருந்தொற்றினை கருத்தில் கொண்டு ஒரு நாள் மாநாடாக நடத்திட வேண்டும். மாவட்ட நிகழ்வுகளில் நிச்சயமாக மகளிர் அமர்வு இருக்க வேண்டும்.

6. மாவட்ட மாநாடுகளை தங்கள் மாவட்டத்திற்கான பொறுப்பு மாநில நிர்வாகிகள் மற்றும் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட மாநில நிர்வாகிகளுடன் கலந்து பேசி நிகழ்ச்சி நிரல் திட்டமிட வேண்டும்.

7. வட்ட மாநாடுகளில் தேர்வு செய்யப்பட மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்களை கொண்டுதான் மாவட்ட பிரதிநிதிகள் மாநாடு நடத்தப்பட வேண்டும்

8. அமைப்பு விதி எண்.10.2.5.1(4)ன்படி மாவட்ட செயலாளர் செய்திடும் செலவின பட்டியலை சரிபார்த்து மாவட்டத் தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

9. நமது சங்கத்தின் அமைப்பு விதி 10.2.5.3(5)ன்படி தம்மால் செய்யப்படும் செலவுகளை தவிர மற்ற அனைத்து செலவுகளுக்கான பட்டியல்களை சரிபார்த்து மாவட்ட செயலாளர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

10. விதி எண்.10.2.5.5(3)ன்படி தணிக்கை செய்யப்பட்ட வரவுசெலவு கணக்குகளையும் வருடாந்திர வரவுசெலவு திட்டத்தையும் மாவட்ட பிரதிநிதித்துவ பேரவையில் வைக்க வேண்டும்.

11. விதி எண்.15.4ன்படி மாவட்ட செயற்குழுவால் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வரும் மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர்கள் பதவி வழி (Ex-Officio) மாவட்ட செயற்குழு உறுப்பினர்களாக செயல்படுவதால் மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்களாவும் செயல்படுவார்கள்.

12. விதி எண்.25.1.ன்படி வட்ட / மாவட்ட மையங்களில் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை முறையே வட்ட செயற்குழு சார்பாக வட்ட செயலாளரும், மாவட்ட செயற்குழு சார்பாக மாவட்ட செயலாளரும் சொத்து பராமரிப்பு பதிவேட்டில் பதிவு செய்து பராமரித்து வரவேண்டும்.

13. மாவட்ட மாநாடுகளில் மாவட்ட செயற்குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாளர் அறிக்கை மற்றும் இரண்டு தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டு மாவட்ட செயற்குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவுசெலவு கணக்குகளையும் பிரதிநிதித்துவப் பேரவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

14. அமைப்பு விதி 10.2.1ன்படி புதிதாக மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட மாநாட்டில் தேர்வு செய்யப்பட வேண்டும்.

15. மேலும் மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டு உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு மாநில மையத்திற்கு விகிதாச்சார தொகை செலுத்தப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கையில் 200 உறுப்பினர்களுக்கு ஒரு நபர் வீதம் மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். சிறப்பாக ஒவ்வொரு மாவட்டத்திற்கு இரண்டு பெண் பிரதிநிதிகள் கூடுதலாக தேர்வு செய்யப்பட வேண்டும். ■

# AISGEF மாநில அரசு ஊழியர்களின் காவலன் தலைநகரில் தலைநிமிரும் சங்கக் கட்டிடம்

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் 1960ஆம் ஆண்டு ஜனவரி 23, 24 தேதிகளில் ஆந்திர மாநிலம் ஹைதராபாத் நகரில் நடைபெற்ற அரசு ஊழியர் மாநாட்டில் தோற்றுவிக்கப்பட்டது. ஆந்திர மாநில NGO யூனியன் தலைவர் ஸ்ரீராமுலு இவ்வமைப்பை தோற்றுவிக்க பெரும் முயற்சி எடுத்தார். இந்த அமைப்புக் கூட்டத்தில் தமிழகத்தைச் சேர்ந்த அன்றைய அரசு அலுவலர் ஒன்றியத்தின் தலைவராக வரதாச்சாரி முதல் அகில இந்திய தலைவராக தேர்வு செய்யப்பட்டார் என்பது பெருமைப்படத்தக்கது. பொதுச் செயலாளராக ஸ்ரீராமுலு தேர்வு செய்யப்பட்டார். 1960-ல் சம்மேளனம் உருவாக்கப்பட்ட பின் 5 ஆண்டு காலம் மாநில அரசு ஊழியர்களை திரட்டிட தொடர்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் அகில இந்திய மாநாடு திருவனந்தபுரத்தில் 1966ஆம் ஆண்டு நவம்பர் 2, 3, 4 தேதிகளில் நடைபெற்றது. இம்மாநாட்டில் வைக்கப்பட்ட 3 முக்கிய கோரிக்கைகள் 1.தேவைக்கேற்ற குறைந்தபட்ச ஊதியம் 2.விலைவாசிப் புள்ளி யுடன் இணைந்த அகவிலைப்படி 3.சம்மேளனத் திற்கு முழு தொழிற்சங்க உரிமை ஆகும். மேற்கு வங்கத்தைச் சேர்ந்த அரவிந்தகோஷ் என்பவர் அகில இந்திய தலைவராகவும், ஸ்ரீராமுலு பொதுச் செயலாளராகவும் இம்மாநாட்டில் தேர்ந்தெடுக் கப்பட்டனர்.

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் மகளிர் அரசு ஊழியர்களை அணி திரட்டி அவர்களை சங்கமாக பயிற்றுவித்து தலைமைப் பொறுப்பிற்கு உயர்த்துவதற்கு தொடர்ந்து முயற்சித்தது. இதன் அடிப்படையில் சம்மேளனத்தில் இணைந்துள்ள ஒவ்வொரு மாநில அமைப்பும் அம்மாநிலத்தில் பெண்களுக் கென்று ஒரு துணை அமைப்பினை உருவாக்கிட வேண்டும் என முடிவெடுத்து அந்த துணை அமைப்பின் பொறுப்பாளர்களை தேசிய செயற்குழு கூட்டங்களில் பங்கேற்கவும் அனுமதித்தது இவர்கள் மாநிலத்தில் பெண்களுக்கான அமைப்புகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கின்றனர்.

கடந்த 60 ஆண்டு காலமாக சம்மேளனத்தின் இடைவிடாத செயல்பாட்டின் காரணமாக பெரும்பான்மையான மாநிலங்களில் மத்திய அரசிற்கு இணையான ஊதியத்தை பெற்றுத்தர முடிந்துள்ளது. 1980க்கு பிறகு மத்திய அரசின் புதிய பொருளாதார கொள்கைகள் நடைமுறைப் படுத்த தொடங்கிய காலம் முதல் இன்றுவரை நடைபெற்றுள்ள அனைத்து அகில இந்திய வேலைநிறுத்தங்களிலும்ஐஐ சம்மேளனத்தின் அறைகூவலுக்கு ஏற்ப லட்சக்கணக்கான மாநில அரசு ஊழியர்கள் பங்கேற்று முத்திரைப் பதித்துள்ளனர். சம்மேளனத்தின் அறைகூவலை ஏற்று 10.02.1988 அன்று நடைபெற்ற அகில இந்திய வேலைநிறுத்தமே தமிழகத்தின் 1988ல் நடைபெற்ற அரசு ஊழியர் ஆசிரியர் (ஜாக்டி) போராட்டத்திற்கு வித்திட்டது. இந்த போராட் டமே தமிழக அரசு ஊழியர் ஆசிரியர்க்கு மத்திய அரசிற்கு இணையான ஊதியத்தைப் பெற்றுத் தந்தது. மேலும் தமிழ்நாட்டில் 2003-ல் நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க அரசு ஊழியர் ஆசிரியர் போராட்டத்தில் பணிநீக்கம் செய்யப்பட்ட 1,76,000 ஊழியர்களுக்கு பாதுகாப்பு நிதி திரட்டிக்கொடுத்து போராட்டத்தை பாதுகாத்தது. சம்மேளனம் தமிழக அரசின் அடக்குமுறைக்கு எதிராக நாடு முழுவதும் கண்டன முழக்கங்கள் எழ வழிவகுத்தது. தமிழக அரசின் ஊழியர் விரோத போக்கு குறித்தும் மத்திய அரசின் பாராமுகம் குறித்தும் உலகத் தொழிலாளர் சம்மேளனத்தின் (ILO) கவனத்திற்கு கொண்டு சென்றது என்பது வரலாற்றுச் சிறப்புமிக்கது.

கடந்த காலங்களில் அரசு ஊழியர் இயக்கங்களை தலைமை தாங்கி நடத்திய தலைவர்கள் இந்திய அரசியல் சட்டப்பிரிவு 310, 311(2C) ஆகிய பிரிவுகளின் கீழ் பழிவாங்கப் பட்டனர். மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் ஆட்சியின் போது முதலமைச்சர் சித்தார்த்த சங்கர் ரேயினால் தோழர் சுகுமால்சென் பழி வாங்கப்பட்டார் தமிழ்நாட்டில் 1974-ல் தோழர் எம்.ஆர்.அப்பன், ஆந்திரத்தில் தோழர் இராமமூர்த்தி ஆகியோர் பழிவாங்கப்பட்டனர்

எத்தனை அடக்குமுறைகள் நேரினும் அவற்றினை மீறி சம்மேளனத்தினை உருவாக்கி அதனை அரசு ஊழியர்களின் கோரிக்கைகளுக்காக மட்டுமல்லாமல், மத்திய மாநில அரசுகளின் தவறான பொருளாதார கொள்கைகளுக்கு எதிராகவும், சாதாரண மக்களின் கோரிக்கை களுக்காகவும் அரசு ஊழியர்களை அணிதிரட்டினர்.

அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளனத்தின் அகில இந்திய மாநாடுகளை 1990ல் கோவை யிலும், 2002-ல் சென்னையிலும், 2018-ல் சென்னையிலும் மூன்று முறையும் தமிழ்நாடு அரசு ஊழியர்சங்கம் நடத்தியுள்ளது என்பது பெருமைக்குறியது. மேலும் நமது தமிழக தோழர் எம்.ஆர்.அப்பன், இரா.எம்.முத்துசுந்தரம், கே.ராஜ்குமார் ஆகியோர் சம்மேளனத்தின் அகில இந்திய பொறுப்புகளில் பணியாற்றியுள்ளனர் என்பதும் பெருமைக்குரியதே.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் சங்கக கட்டிடம் தலைநகரில் தலைநிமிர உயர்ந்து வருகிறது. இதற்கான நிதி இலக்கு நமது சங்கத்திற்கு ரூ.50,00,000/- நிர்ணயிக்கப்பட்டது இதுவரை ரூ.5,70,000/- மட்டுமே நம்மால் மாநில மையத்திடம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே முழுமையான இலக்கை உடனடியாக அடைய வேண்டியிருப்பதால் மாவட்ட மாநாடு நடக்கும் தேதிகளில் தோழர்கள் முழுமையாக சுகுமால் சென் பவன் நிதிக்கான குறியீட்டினை அடைய வேண்டியுள்ளது அந்த இலக்கை நோக்கி பயணிப்போம். மாவட்ட மாநாடுகளில் மாவட்ட குறியீட்டினை முழுமையாக நிறைவு செய்வோம்.

சம்மேளனத்தின் வழிகாட்டுதலோடு தொடர்ந்து மக்களுக்கான பணிகளை முன்னெடுத்துச் செல்வோம்.

- **இரா.மங்களபாண்டியன்**

## மாவட்ட மாநாடு

### பெரம்பலூர்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின், பெரம்பலூர் மாவட்ட 13 வது மாநாடு, மாவட்ட தலைவர் இளங்கோவன் தலைமையில் 2.10.21 அன்று பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் பா. சிவகுமார் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். மாவட்ட துணைத் தலைவர் சு.சரவணசாமி வரவேற்றார். மாநில பொருளாளர் சு.பாஸ்கரன் மாநாட்டை துவக்கி வைத்தார். மாவட்ட செயலாளர் ப. குமரி அனந்தன் வேலை அறிக்கையையும், மாவட்ட பொருளாளர் பெ.ராஜராஜன் நிதிநிலை அறிக்கையையும் முன்மொழிந்தனர். மாவட்ட துணைத் தலைவர்கள் மரியதாஸ், மாவட்ட தணிக்கையாளர் தெய்வராஜா, ராஜ்மோகன் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் தீர்மானங்களை முன்மொழிந்தனர். வேலை அறிக்கை- வரவு செலவு அறிக்கை மீது விவாதம் நடந்து, ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாவட்ட மாநாட்டில் புதிய நிர்வாகிகளும், மாநில மாநாட்டு பிரதிநிதிகளும் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட மாநாட்டை மாநில துணைத் தலைவர் ஆ. பெரியசாமி நிறைவு செய்து நிறைவு உரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் சி.சுப்பிரமணியன் நன்றி கூறினார். கீழ்க்கண்டவாறு மாவட்ட புதிய நிர்வாகிகள், பிரதிநிதிகளும் தேர்வு செய்யப் பட்டனர். மாவட்ட மாநாட்டில் சுமார் 80 ஊழியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

# வட்ட கிளை மாநாடுகள்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மாநாடு டிசம்பர் 18, 19 தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னதாக மாவட்ட மாநாடுகளையும், வட்டக்கிளை மாநாடுகளையும் நடத்தி முடிக்க வேண்டும் என்ற மாநில செயற்குழுவின் முடிவிற்கிணங்க தமிழகம் முழுவதும் வட்டக்கிளை மாநாடுகள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக...

## மயிலாடுதுறை

மயிலாடுதுறை வட்டகிளையின் 14 வது வட்ட மாநாடு 18.09.2021 அன்று மயிலாடுதுறை TNROA சங்க கட்டடத்தில் வட்ட துணைத் தலைவர் கே.ரஜினி தலைமையில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. சங்க கொடியினை வட்ட செயலாளர் ஆர்.சிவபழனி மற்றும் சம்மேளன கொடியினை நாகை மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன் சேரல் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வட்ட இணைச் செயலாளர் டி.சிங்காரவேலு வரவேற்றார். மூத்த உறுப்பினர் எஸ்.சாந்தி அஞ்சலி தீர்மானம் முன்மொழிந்தார். மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன் சேரல் துவக்கவுரை யாற்றினார். வட்ட செயலாளர் ஆர்.சிவபழனி செயலாளர் அறிக்கையும், பொருளாளர் த.அருண்ஜோஷி வரவு - செலவு அறிக்கையும் சமர்ப்பித்தனர்.

அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் ஆர்.கமலநாதன், த.மு.எ.க.ச மாவட்டச் செயலாளர் பேராசிரியர் ப.பாலசுந்தரம் (TNRDOA), மாவட்டத் தலைவர் சி.நல்லமுத்து, TNROA மாவட்டத் தலைவர் செ.தென்னரசு, மாவட்ட அமைப்புக்குழு உறுப்பினர் ஆர்.கலா, அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்டத் தலைவர் வ.பழனிவேலு, மேனாள் மாவட்டத் தலைவர் டி.கணேசன், CITU மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.ராமானுஜம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

வட்ட இணைச் செயலாளர் பி.ஜார்ஜ், மாவட்ட அமைப்புக்குழு உறுப்பினர் எம்.நடராஜன் ஆகியோர் தீர்மானங்கள் முன்மொழிந்து உரையாற்றினர். மாவட்ட அமைப்பாளர் து.இளவரசன் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாநில தலைவரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநிலச் செயலாளருமான எம்.சௌந்தர்ராஜன் நிறைவுரையாற்றினார். மாநாட்டில் புதிய வட்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வட்டத் தலைவராக கே.வெங்கடேஸ்வரன், துணை தலைவர்களாக கே.ரஜினி, பி.ஜார்ஜ், கே.கண்ணன், வட்ட செயலாளராக த.அருண்ஜோஷி, இணைச் செயலாளர்களாக எஸ்.கே.லதா, பி.ஆரோக்கியமதன், வி.கார்த்தி, வட்ட பொருளாளராக டி.சிங்காரவேலு, மாவட்ட செயற்குழு உறுப்பினராக வ.கருணாகரன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மாவட்ட செயற்குழு உறுப்பினர் பி.மதிமாறன் நன்றி கூறினார்.

## ஒசூர்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூர், சூளகிரி, கிருஷ்ணகிரி வட்டக்கிளை மாநாடுகள் நடைபெற்றன. அதன்படி ஒசூர் வட்டக்கிளையின் 13ஆம் மாநாடு 11.09.2021 அன்று நடைபெற்றது. வட்டக் கிளை தலைவர் வி.சிவா தலைமை தாங்கினார். TNGEA, AISGEF பதாகைகள் ஏற்றப்பட்டு மாநாடு துவங்கியது. மாவட்ட பொருளாளர் தோழர் V.தேவராஜ் துவக்கவுரையாற்றினார். செயலாளர் மற்றும் வரவு - செலவு அறிக்கைகள் வைக்கப்பட்டது. 5 ஊழியர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. புதிய நிர்வாகிகள் தேர்வுக்குப் பின் மாவட்ட தலைவர் B. சந்திரன் சிறப்புரையாற்றினார். 2021ஆம் ஆண்டிற்கான 500 உறுப்பினர் சந்தா, 50 அரசு ஊழியர் மாத இதழ் சந்தா, 25எம்ப்ளாயீஸ் ஃபோரம் சந்தா மாவட்ட மையத்திடம் வழங்கப்பட்டது. மாவட்ட செயலாளர் R.நடராஜன் நிறைவுரையாற்றினார். இறுதியாக வட்ட இணைச் செயலாளர் வி.சுரேஷ்குமார் நன்றி கூறி மாநாட்டை நிறைவு செய்தார். மாநாட்டில் 68 பெண்கள் உட்பட 114 பேர் கலந்து கொண்டனர்.

## சூளகிரி

சூளகிரி 2ஆம் வட்டக் கிளை மாநாடு 25.09.2021 அன்று நடைபெற்றது. வட்ட தலைவர்

வி. சப்தமோகன் தலைமை தாங்கினார். கோரிக்கை முழக்கங்களோடு TNGEA, AISGEF கொடிகள் ஏற்றப்பட்டு தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்திய பின் மாநாடு துவங்கியது. மாவட்ட துணைத் தலைவர் மஞ்சுளா மாநாட்டை துவக்கி வைக்க, செயலாளர் அறிக்கை மற்றும் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கைகள் முன் மொழியப்பட்டது. நிர்வாகிகள் தேர்வுக்குப்பின் மாவட்ட நிர்வாகிகள் K.ஜெகதாம்பிகா, சி.கல்யாணசுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்க மாவட்ட தலைவர் பி.சந்திரன் சிறப்புரையாற்றினார். 2021ஆம் ஆண்டு 400 உறுப்பினர் சந்தா, டைரி நிலுவைத் தொகை ரூ17,050 / -, அரசு ஊழியர் மாத இதழ் சந்தா 50-அய் பெற்றுக்கொண்டு மாவட்ட செயலாளர் R.நடராஜன் நிறைவுரையாற்றினார். மாநாட்டில், 57 பெண்கள் உட்பட 82 பேர் கலந்துகொண்டனர்.

### கிருட்டினகிரி

கிருட்டினகிரி வட்டக் கிளை 13 ஆம் மாநாடு 26.09.2021 அன்று வட்ட தலைவர் G.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. கோரிக்கை முழக்கங்களுடன் TNGEA, AISGEF கொடிகள் ஏற்றி, தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்திய பின் மாநாடு துவங்கியது. ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட துணைத்தலைவர் K.கோபாலகண்ணன் மாநாட்டை துவக்கி வைத்தார். செயலாளர் அறிக்கை மற்றும் வரவு-செலவு அறிக்கைகள் எழுத்துப்பூர்வமாக முன்வைக்கப்பட்டு விவாதத்திற்குப் பின் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. புதிய நிர்வாகிகள் தேர்வுக்குப் பின் நகராட்சி/மாநகராட்சி அலுவலர் சங்கத்தின் மாநில தலைவர் வாழ்த்துரை வழங்கினார். 2021ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் சந்தா 1000-ஐ பெற்றுக் கொண்டு மாவட்ட பொருளாளர் V.தேவராஜ் நிறைவுரையாற்றினார். மாநாட்டில் 28 பெண்கள் உட்பட 68 பேர் கலந்துகொண்டனர்.

## தென் சென்னை

### டிஎம்எஸ்

டிஎம்எஸ் பகுதி குழுவின் 13ஆவது மாநாடு டிஎம்எஸ் சங்க அலுவலகத்தில் 2021 அக்டோபர் 1 அன்று நடைபெற்றது. மணிமாலா தலைமை தாங்கினார். தனசேகரன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். சரவணகுமார் வரவேற்றார். மாவட்ட தலைவர் டேனியல் ஜெயசிங் துவக்க உரையாற்றினார். வேலை அறிக்கையை ஜெயராமனும், வரவு செலவு அறிக்கையை செல்வராஜூம் சமர்ப்பித்தனர். பொது சுகாதாரத் துறை அலுவலர் சங்கத்தின் ரவி மற்றும் மாவட்ட மகளிர் துணைக் குழு உறுப்பினர் யோகாம்பாள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட இணைச் செயலாளர் செந்தில்குமார் நிறைவுரை யாற்றினார். சுரேஷ் பிரேம்குமார் நன்றி கூறினார்.

### கிண்டி-தாம்பரம்

23.9.2021 அன்று 11வது பகுதி மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. V.ஹரிஹரன் வரவேற்றார். P.M.கார்த்திகேயன் தலைமையேற்றார். V.ஜெயக்குமார் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட தலைவர் S.டேனியல் ஜெயசிங் துவக்க உரையாற்றினார். பகுதி செயலாளர் வி.பாரி வள்ளல் மற்றும் பகுதி பொருளாளர் மு.சாலகுமார் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர்.

ஐடிஐ அலுவலர் சங்கத்தின் N.ரமேஷ், அரசு சுகாதார போக்குவரத்து துறையின் S. கண்ணன், மின் ஆய்வுத்துறை ஊழியர் சங்கத்தின் இரா.வெற்றிச்செல்வன், வேலைவாய்ப்பு ஊழியர் சங்கத்தின் ஜி.சுந்தரேசன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். ஜி.சொர்ண பாண்டி, விஜயகுமார், விஜயலட்சுமி, புண்ணியகோடி ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். மாவட்ட துணைத் தலைவர் சி.கலைச்செல்வி நிறைவுரை யாற்றினார். தட்சிணாமூர்த்தி நன்றி கூறினார்.

கிண்டி தாம்பரம் பகுதி மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக வி.பாரி வள்ளல், துணைத் தலைவர்களாக R.அமரேசன், A.S.தச்சிணமூர்த்தி, செயலாளராக G.ஹரிஹரன், இணை செயலாளர்களாக ஜி.சொர்ணா பாண்டி, V.ஜெயக்குமார், பொருளாளராக மு.சாலகுமார், செயற்குழு உறுப்பினர்களாக சுந்தரமூர்த்தி, பாபு (ஆகாஷ்), ஷேக்மைதீன், கார்த்திகேயன், விஜயலட்சுமி ஆகியோர் ஏகமனதாக மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டனர்.

## வடசென்னை

### அம்பத்தூர் - ஆவடி

24.9.2021 அன்று ஒரகடம் பள்ளியில் பகுதி துணைத் தலைவர் பொன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. பகுதிக் குழு செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தார். வரவு செலவு அறிக்கையினை

இணைச் செயலாளர் சமர்ப்பித்தார். அறிக்கையின் மீது விவாதமும் அதனைத் தொடர்ந்து தொகுப்புரையும் வழங்கப்பட்டது. புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. தலைவராக எல்.வேல்பாண்டி, செயலாளராக என்.வெங்கட கிருஷ்ணன், பொருளாளராக ஜி.வேலு உள்ளிட்ட துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

## எழும்பூர்

28.9.2021 அன்று ஐஓஜி வளாகத்தில் தலைவர் எல்.புகழானந்த் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் அறிக்கையினை அன்சர்பாஷாவும், பொருளாளர் ஏ.விஜயா வரவு செலவு அறிக்கையினையும் சமர்ப்பித்தனர். விவாதங் களுக்குப்பின் தொகுப்புரை வழங்கப்பட்டது. மாநாட்டில் தலைவராக எல்.புகழானந்த், செயலாளராக அன்சர்பாஷா, பொருளாளராக ஏ.விஜயா உள்ளிட்ட துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

## குறளகம்

01.10.2021 அன்று காதி கூட்டரங்கில் துணைத் தலைவர் த.வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் ஆ.கோபிநாதன் அறிக்கையினையும், பொருளாளர் ச.நரேஷ் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தனர். விவாதங்களுக்குப் பின் தொகுப்புரை வழங்கப்பட்டது. மாநாட்டில் தலைவராக த.வேல்முருகன், செயலாளராக ஆ.கோபிநாதன், பொருளாளராக ச.சுரேஷ் உள்ளிட்ட துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

## தங்கசாலை

02.10.2021 அன்று வடசென்னை ஐடிஐ வளாகத்தில் பகுதி தலைவர் லட்சுமணன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் எம்.விவேகானந்தன் செயலாளர் அறிக்கை மற்றும் வரவு செலவு அறிக்கையினை வி.தாமோதரன் ஆகியோர் சமர்ப்பித்தனர். விவாதங்களுக்குப்பின் தொகுப்புரை வழங்கப்பட்டது. மாநாட்டில் தலைவராக க.மோகன்தாஸ், செயலாளராக எம்.விவேகானந்தன், பொருளாளராக வி.தாமோதரன் உள்ளிட்ட துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

## மணப்பாறை

திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்ட கிளையின் 13வது மாநாடு 17.09.2021 அன்று G.வெங்கடேஸ்வரன் தலைமையில் நடை பெற்றது. அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் புருஷோத்தமன் துவங்கி வைத்தார். வட்டக்கிளை செயலாளர் அல்போன்சா வேலை அறிக்கை சமர்ப்பித்தார். மாவட்ட தலைவர் முனைவர் கா.பால்பாண்டி, மாவட்டச் செயலாளர் பொ.பழனிச்சாமி, மாவட்ட பொருளாளர் R.சுந்தர்ராஜ், சாலை பணியாளர்கள் சங்கத்தின் கனகராஜ், செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநில துணைத் தலைவர் அ.பெரியசாமி நிறைவுரையாற்றினார். மல்லிகா நன்றி கூறினார். மாநாட்டில் 7 பெண் தோழர்கள் உள்பட 25 பேர் கலந்து கொண்டார்கள். மாநாட்டில் கீழ்க்காணும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

தலைவராக ஜி.வெங்கடேஷ்வரன், துணைத் தலைவர்களாக சபரிநாதன், குமரேசன், கவியரசன், செயலாளராக அல்போன்சா, இணை செய லாளர்களாக சேகர், இராமைய்யா , கனகராஜ், பொருளாளராக ரெங்கராஜ் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

## கூடலூர்

நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டக் கிளையின் 13ஆம் வட்டார மாநாடு தலைவர் சந்திரபோஸ் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலர் ஆசரா துவக்கிவைத்தார். வட்ட செயலாளர் சிவ பெருமாள் செயலாளர் அறிக்கை மற்றும் பொருளாளர் போஜன் ஆகியோர் நிதிநிலை அறிக்கை முன்வைத்தார். மாவட்ட நிர்வாகிகள் ஆனந்தன், சலீம் மற்றும் பிரபாவதி முன்னிலையில் புதிய வட்டார நிர்வாகிகள் தேர்தல் நடந்தது.

தலைவராக ஆர். போஜென், செயலராக சிவ பெருமாள், பொருளாளராக ஜெயகாந்தன், துணைத் தலைவர்களாக ராஜ்குமார், புவனேந்திரன், புஸ்பலதா, இணை செயலர்களாக அபிலாஷ், தேவ அன்பு, செல்வி ஆகியோர் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகிகளை பாராட்டியும் மாநாட்டை வாழ்த்தியும் ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி

தலைவர் சஜி, அங்கன்வாடி பணியாளர் சங்க நிர்வாகி விஜய், அனைத்து துறை ஓய்வூதியர் சங்க நிர்வாகி வர்கீஸ், சத்துணவு ஊழியர் சங்க நிர்வாகி இன்பனாதன், பத்மநாபன் பந்தலூர் வட்டம், மாவட்ட பொருளாளர் ஆனந்தன் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். ஓய்வு பெற்ற தோழர்களை பாராட்டிய பின் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில செயலாளர் சி. பரமேஸ்வரி நிறைவுறை ஆற்றினர். செயலாளர் சிவ பெருமாள் நன்றி கூறினார்.

## திருவைகுண்டம்

திருவைகுண்டம் 13வது வட்ட கிளை மாநாடு 4.10.21 அன்று காலை கருங்குளம் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் 70 உறுப்பினர்களின் பங்கேற்பில் சங்க கொடியேற்றத்துடன் துவங்கியது. வட்ட தலைவர் து. அண்ணாமலை பரமசிவன் மற்றும் மாநில துணை தலைவர் ந.வெங்கடேசன் ஆகியோர் கொடி ஏற்றி மரியாதை செலுத்தினர். அஞ்சலி தீர்மானத்தினை மரியநேசம் வாசிக்க உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினர். மாவட்ட செயற்குழு உறுப்பினர் வேல்முருகன் வரவேற்றார்.

மாநில துணை தலைவர் ந.வெங்கடேசன் துவக்க உரையாற்றினர். வட்ட செயலாளர் சீனிவாசன் வேலை அறிக்கையையும், வட்ட பொருளாளர் ப.முத்துசாமி நிதிநிலை அறிக்கையும் சமர்ப்பித்தனர். TNRDOA ன் கருங்குளம் வட்ட செயலாளர் முருகன் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட துணை தலைவர் சோ. மகேந்திர பிரபு வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட பொருளாளர் மு.தமிழரசன் புதிய நிர்வாகிகள் பட்டியலை முன்மொழிய உறுப்பினர்கள் கரகோசத்தின் மூலமாக ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். தொடர்ந்து மு.தமிழரசன் நிறைவுரை நிகழ்த்தினார்.

வட்டத் தலைவராக து.அண்ணாமலை பரமசிவன், வட்ட செயலாளராக சீனிவாசன், வட்ட பொருளாளராக ப.முத்துசாமி, துணைத் தலைவர்களதக மகாராஜன், மரியநேசம், இணைச் செயலாளர்களாக மாரிமுத்து, முருகன், முத்துலெட்சுமி ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர். இறுதி நிகழ்வாக சந்திரசேகர் நன்றி கூறினார்.

## குத்தாலம்

குத்தாலம் வட்டகிளையின் 14வது வட்ட மாநாடு 02.10.2021 அன்று குத்தாலம் லலிதா திருமண மஹாலில் வட்ட துணைத் தலைவர் ஆர்.மதியழகன் தலைமையில் கொடியேற்றத் துடன் தொடங்கியது. பா.ராஜமோகன் வரவேற் புரையாற்றினார். கே.ரேவதி அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். மயிலாடுதுறை மாவட்ட அமைப்பாளர் து.இளவரசன் துவக்கவுரையாற்றினார். வட்ட இணைச் செயலாளர் கே.ரேவதி செயலாளர் அறிக்கையும், பொருளாளர் எஸ்.வெங்கடேசன் வரவு - செலவு அறிக்கையும் சமர்ப்பித்தனர்.

அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க குத்தாலம் வட்டத் தலைவர் ஆர்.கமலநாதன், சீர்காழி வட்ட செயலாளர் எஸ்.ரமேஷ், தமிழ்நாடு நில அளவை அலுவலர் ஒன்றிப்பு மாவட்டச் செயலாளர் ஆர்.முருகானந்தம், மாவட்ட அமைப்புக்குழு உறுப்பினர் எம்.நடராஜன், ஆர்.சிவபழனி, அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்டத் தலைவர் வ.பழனிவேலு, CITU மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.ராமானுஜம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கே.பிரகாஷ் தீர்மானங்கள் முன்மொழிந்தார். மேனாள் மாவட்டத் தலைவர் டி.கணேசன் நிறைவுரையாற்றினார். மாநாட்டில் புதிய வட்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வட்டத் தலைவராக ஆர்.மதியழகன், துணை தலைவர்களாக ஆர்.கமலதாசன், கே.ரேவதி, வட்ட செயலாளராக பா.ராஜமோகன், இணைச் செயலாளர்களாக கே.ரோஜா, எம்.முருகானந்தம், வட்ட பொருளாளராக பி.பக்கிரிசாமி, மாவட்ட செயற்குழு உறுப்பினராக கே.பிரகாஷ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வட்டக்கிளை சார்பாக மாவட்ட மாநாட்டிற்கு ரூ.5,000/- நிதி வழங்கப்பட்டது. மாநாட்டில் மயிலாடுதுறை வட்ட பொருளாளர் டி.சிங்காரவேலு உள்ளிட்ட 40 க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்துகொண்டனர். வட்ட செயலாளர் பா.ராஜமோகன் நன்றி கூறினார்.

## தாராபுரம்

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டக் கிளையின் 14ஆவது 25.09.2021 அன்று

நடைபெற்றது. தாராபுரம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற பேரணிக்கு வட்டக்கிளை தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் கி.ராணி கொடி அசைத்து துவக்கி வைத்தார். பேரணியில் நூற்றுக்கு மேற்பட்ட தோழர்கள் அணிவகுத்தனர்.

மாநாடு அமைவிடம் முன்பு அமைக்கப்பட்ட கொடியேற்று நிகழ்வில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியினை வட்டக்கிளை தலைவர் செந்தில்குமார் ஏற்றி வைத்தார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியினை கொடியினை மாவட்ட தலைவர் கி.ராணி ஏற்றி வைத்தார். அடுத்த நிகழ்வு மறைந்த தலைவர்களின் நினைவு ஸ்தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. செந்தில்குமார் தலைமை தாங்கினார். சு.சிவராசு அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாசிலமணி வரவேற்றார். மாவட்ட தலைவர் ராணி துவக்கவுரையாற்றினார். செயலாளர் அறிக்கையினை இல.தில்லையப்பன் வரவு செலவு அறிக்கையினை மாசிலமணி ஆகியோர் சமர்ப்பித்தனர். மாவட்ட துணைத் தலைவர் பசுபதி வாழ்த்தி பேசினார். ரீட்டா மாவட்ட இணைச் செயலாளர் வி.மேகலிங்கம் மா.அருள்பிரகாசம், செல்வி இணைச்செயலாளர், ச.ராணி மாவட்ட மகளிர் துணைக் குழு உறுப்பினர் ஆகியோர் தீர்மானங்கள் முன்மொழிந்தனர்.

முருகதாஸ் மாவட்ட பொருளாளர் சிறப்புரை யாற்றினார். மாவட்ட செயலாளர் மா.சுப்பிர மணியன் நிறைவுரையாற் றினார்.வீ.தங்கவேல் நன்றி கூறினார். தலைவராக செந்தில்குமார், துணை தலைவர்களாக விதுர்வேந்தன், வி.மேகலிங்கம்,செல்வம், ர.ரங்கநாதன், செயலாளராக இல.தில்லையப்பன், இணைச் செயலாளர்களாக ச.ராணி, செல்வி, வீ.தங்கவேல், பொருளாளராக மாசிலமணி, தணிக்கையாளர்களாக நா.தன்னஞ்சி, தா.சந்திரகுமார், மாவட்ட செயற்குழு உறுப்பினர் சு.சிவராசு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## கோவில்பட்டி

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி 14வது வட்ட மாநாடு 11-09-2021 அன்று நடைபெற்றது. மாநாட்டில் தலைவராக அ.பிரான்சிஸ், செயலாளராக ஜெ.உமாதேவி, பொருளாளராக உ.அருணா, துணைதலைவர்களாக ச.நவநீத கண்ணன், மு.மகாராஜன், இணைச்ள செயலாளர்களாக சு.பாலகணேஷ், பி.செல்லத்துரை, என்.ராதாகிருஷ்ணன், எல்.சாந்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## பாப்பிரெட்டிப்பட்டி

13வது வட்ட மாநாடு பாப்பிரெட்டிப்பட்டி ஸ்ரீமகாலட்சுமி அம்மாள் திருமண மண்டபத்தில் தலைவர் சண்முகம் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக நமது TNGEA சங்க கொடியினை மாவட்டத் தலைவர் M.சுருளிநாதன் மற்றும் AISGEF சங்க கொடியினை மாவட்ட செயலாளர் கி.சேகர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது வட்ட துணைத் தலைவர் கரிகாலன் வரவேற்றார்.

துவக்க உரையாக மாவட்டத் தலைவர் M.சுருளிநாதன் உரையாற்றினார். வட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி வேலை அறிக்கை யினையும், வட்ட பொருளாளர் முனிராஜ் வரவுசெலவு அறிக்கையினையும் சமர்த்தனர்.

## சின்னசேலம்

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் வட்டக் கிளையின் ஐந்தாவது வட்ட மாநாடு 17.9.21 அன்று சின்ன சேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில் வட்ட பொருளாளர் சார்லஸ் தலைமையில் நடைபெற்றது, அஞ்சலி தீர்மானத்தை சுகவனம் வாசித்தார்.

மாவட்ட இணைச் செயலாளர் கி.சாமிதுரை துவக்க உரையாற்றினார். செயலாளர் அறிக்கையை சுதா மற்றும் பொருளாளர் அறிக்கை சார்லஸ் ஆகியோர் சமர்ப்பித்தனர். ஊரக வளர்ச்சித் துறையின் முன்னாள் மாவட்ட பொருளாளர் கி.கணேசன், சங்கராபுரம் வட்டத் தலைவர் வி.காஞ்சனா மேரி, கள்ளக்குறிச்சி வட்டச் செயலாளர் எஸ். குமாரதேவன், மாவட்ட துணைத் தலைவர் ஜி.வீரபுத்திரன், மாவட்ட துணைத் தலைவர் எம்.ஆர். உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினர்.

புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து மாவட்ட பொருளாளர் பி.ரவி மற்றும் மாவட்டத் தலைவர் ஆனந்தகிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிறைவாக மாவட்ட செயலாளர் கே.மகாலிங்கம் நிறைவுரை ஆற்றினார். வெள்ளத்துரை நன்றி கூறினார். ■

# காலத்தே கனிந்த கனி

கருப்பும் சிவப்பும் நீலமும் இணைந்து களம் காண வேண்டிய காலமிது. இத்தகைய காலத்தில்? கருப்பைப் பற்றியும் சிவப்பைப் பற்றியும் நீலத்தைப் பற்றியும் ஒன்றுக்கொன்று புரிதலின்றி மேலிருந்து கீழ் வரை குழப்பங்களால் களப்பணியில் வீரியம் காட்டாமல் உள்ளதைக் காவி பயன்படுத்திக் கொண்டு இந்தியாவின் அரசியல் பொருளாதார சமூகத்தைப் பாய்ச்சல் வேகத்தில் பின்னோக்கித் தள்ளிக் கொண்டிருக் கிறது. இது மிகவும் ஆபத்தானது என்பதை உணரும் அறிவு ஜீவிகள்கூட கருப்பும் சிவப்பும் நீலமும் தத்தம் வேற்றுமைகளைப் பாராட்டாமல் ஒன்றுபட்டுக் களம் கண்டு காவியைக் காலி செய்ய வேண்டியது காலத்தின் அவசியம் என்பதை உணர்த்தும் நூலாகவே 'மார்க்ஸ்-பெரியார்-அம்பேத்கர் ஒற்றுமையும் முரண்பாடும்' எனும் நூலை அர்த்த அடர்த்தியுடன் உருவாக்கி யுள்ளார் நூலாசிரியர் என். ராமகிருஷ்ணன்.

ஏற்கெனவே இம் மூன்று ஆளுமைகளைப் பற்றித் தனித்தனியே நூல்களைப் படைத்திருந் தாலும் இம்மூவரின் ஒற்றுமைகளையும் முரண்பாடுகளையும் கண்முன் நிறுத்தும் பணியைச் செவ்வனே செய்துள்ள நூலாசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்

மிகைநாடி மிக்க கொளல்"

எனும் திருக்குறளுக்கேற்ப மார்க்ஸ் பெரியார் அம்பேத்கர் ஆகிய மூவருக்குமிடையே ஒற்றுமையும் முரண்பாடும் ஒப்பீட்டளவில் நோக்கும்போது உயர்ந்து நிற்பது ஒற்றுமையே எனில் மிகையல்ல.

எனவேதான் இம்மூன்று ஆளுமைகளின் ஒற்றுமை எனும் அடித்தளத்தில் சமூக மாற்றத் திற்கான மாளிகையை எழுப்ப வேண்டிய அவசியம் எழுந்து ள்ளதை உணர்ந்து அதைச் சாத்தியமாக்க இந்நூல் பெரிதும் துணைபுரியும் என்ற நம்பிக்கை ஊற்றெடுக்கிறது.

'மாற்றம் ஒன்றே மாறாதது' எனும் தத்துவத் தின் அடிப்படையில் மனித குல வரலாற்றில் சமுதாய மாற்றங்களும் தவிர்க்க முடியாதது. அது புராதன பொதுவுடைமைச் சமுதாயத்திலிருந்து அடிமை சமுதாயமாகவும் அடிமை சமுதாயத் திலிருந்து நிலப்பிரபுத்துவ சமுதாயமாகவும் நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலிருந்து முதலாளித் துவ சமுதாயமாகவும் முதலாளித்துவ சமுதாயத் திலிருந்து சோஷலிச சமுதாயமாகவும் சோஷலிச சமுதாயத்திலிருந்து கம்யூனிச சமுதாயமாகவும் மாறும். அடிப்படையில் இம்மாற்றம் நாடுகளின் தன்மைக்கேற்ப அமையும். நிலப்பிரபுத்துவமும் முதலாளித்துவமும் கலந்த சமுதாயமாகவே நீடிக்கும் இந்தியாவே அதற்கு உதாரணமாகி விடுகிறது.

மார்க்சியம் வறட்டுத் தத்துவமன்று. அது அறிவியல் பூர்வமானது. வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தது. தத்துவமும் நடைமுறையும் இரு கண்கள் போன்றது. இரட்டை மாட்டு வண்டியில் இரண்டு மாடுகளும் ஒன்றுபோல நடந்தால்தான் வண்டி ஊர் போய்ச் சேரும். அதுபோலவே மார்க்சிய தத்துவமும் நடைமுறையும் ஒன்றில்லாமல் மற்றொன்று ஜீவிக்க முடியாது. இரண்டும் இணைந்துதான் உலகில் சமூக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இத்தகைய மார்க்சிய தத்துவம் வளரும் தத்துவம் என்பதை நூலாசிரியர் தனி அத்தியாயம் மூலம் நிறுவியுள்ளார். இந்தியாவில் சமூக மாற்றத்திற்குப் பெரும் சவாலாகவும் தடையாக வும் இருப்பது சாதியம் என்பதைப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே கணித்தார் காரல் மார்க்ஸ் என்பதை இந்நூலின் வழி அறியலாம்.

"முதலாளித்துவம் புரட்சிகள் மூலம் ஐரோப் பாவில் பிரபுத்துவம், மன்னராட்சி முறைகளுக்கு மரண அடி கொடுத்தது. பிரபுத்துவம் அந்நாடு களில் முற்றாக அழித்தொழிக்கப்பட்டது. கத்தோலிக்க இறையியல் என்பதன் போப் பாண்டவரின் அதிகாரம் என்பது கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அங்கே மதத்திற்கு அரசியலில் தலையிட அனுமதியில்லை. எனவே பிரபுத்துவ ஒழிப்பு என்பது பிற்போக்கான கலாச்சார பாரம்பரியங்கள், மூடத்தனம், பழமைவாதம், குறுகிய மனோபாவங்கள், குருட்டு நம்பிக்கைகள், கத்தோலிக்க மதத்தின்

ஆதிக்கம் அனைத்திற்கும் மரண அடி கொடுத்தது. பொருளாதாரத்தில் பிரபுத்துவ உறவுகளைத் தகர்த்தெறிந்தது" எனும் நூலாசிரியர் கூற்று கவனிக்கத்தக்கது.

இதுவரை நடந்த போர்கள் யாவுமே வர்க்கப் போராட்டங்களின் ஒரு பகுதியே எனும் மார்க்சின் கூற்றுப்படி இந்தியாவில் சென்ற நூற்றாண்டில் முதன்முதலாகத் தோன்றிய வர்க்கப் போராட்டம் என்பது மாபெரும் தேசபக்தர் வ.உ.சி. தலைமையில் தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்கள் நடத்திய கூலி உயர்வுப் போராட்டம் என்கிறார் என். ராமகிருஷ்ணன்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்த சுதந்திரப் போராட்டத்தில் முக்கியப் பங்காற்றிக் கொண்டே நிலப்பிரபுத்துவ மற்றும் சாதிய ஒடுக்குமுறைகளை எதிர்த்து கம்யூனிஸ்டுகள் நடத்திய வீரஞ்செறிந்த போராட்டங்களையெல்லாம் தெளிவாக விளக்கியுள்ளார் நூலாசிரியர்.

ஆனால் இதே காலகட்டத்தில் விடுதலைப் போராட்டத்தில் பெரும் பங்கு வகிக்காத தந்தை பெரியார் மூட நம்பிக்கைகள், புராண இதிகாசப் புனைசுருட்டுகள், பார்ப்பனீய ஆதிக்கம் மற்றும் அட்டூழியங்களை எதிர்த்து பட்டிதொட்டி யெங்கும் பரப்புரை என இயங்கி வந்தார்.

இதே காலத்தில் தன் பள்ளிப் பருவம் முதல் தீண்டாமைக் கொடுமைகளை விவரிக்க முடியாத அளவிற்கு அனுபவித்து வந்த அம்பேத்கர் வறுமையிலும் படிக்கும் வெறியுடன் சதா சர்வ காலமும் படித்துக் கொண்டே தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடி யதையும், அப்போராட்டங்களுக்கு இடையூறாக தமக்குக் கிடைக்கும் வேலைவாய்ப்புகள் அமைந்துவிடக் கூடாது என்பதற்காக வாய்ப்பு களை நிராகரித்து வறுமையில் உழன்றாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கிளர்ந்தெழுந்த தையும் இந்நூலில் காண முடிகிறது.

தாம் வாழ்ந்த காலத்தில் முன்னுக்கு வரும் பிரச்சனையைக் கருத்தியலாக மக்கள் முன் வைத்து ஓயாமல் பரப்புரை மேற்கொண்ட பெரியார் ஒன்றைத் தெளிவாகக் கூறியிருந்தார். தாம் சொன்னாலும் யார் சொன்னாலும் 'ஏன் எப்படி எதற்கு எதனால்' என்னும் கேள்விகளைப் போட்டு அறிவின் மூலம் விடை கண்டு தெளிவடைய வேண்டும். அறிவை விட சிறந்தது எதுவுமில்லை என்றுரைத்தது மிகச் சரியானது தானே. மனிதர்களிடையே சமத்துவம் நிலவாத தற்குக் காரணம் சாதி, தீண்டாமை. அவற்றை நியாயப்படுத்துவது மனு தர்மம், அதைக் கட்டாயமாக்குவதற்குப் பயன்படுத்தப்படுவது மதம். மதத்திற்குத் தோற்றுவாய் கடவுள். எனவே அந்தக் கடவுள் தான் மூலகாரணமாக இருக்கும் பட்சத்தில் அது ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் குறியாக இருந்தார் தந்தை பெரியார்.

ஆனால் அவரேதான் சோவியத் ரஷ்யாவிற்குச் சென்று திரும்பிய பின் சாதி மதங்களற்ற சமதர்ம சமுதாயம் கண்முன்னால் இருப்பது ம் அதற்குக் காரணம் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தத்துவமும் எனும்போது அதை எழுத்திலும் பேச்சிலும் விரிவான அளவில் பெரியார் கொண்டு சென்றதை ஆதாரங்களுடன் விளக்குகிறார் நூலாசிரியர். ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சி தடை விதிக்கவே பின் வாங்கினார் பெரியார். மீண்டும் சீர்திருத்தக் கருத்துக்களையே உயர்த்திப் பிடித்தார் என்பதைக் காண முடிகிறது.

அண்ணல் அம்பேத்கர் பெரும்பாலும் கம்யூனிஸ்டுகளுடன் முரண்பட்ட தைப் பட்டியலிடும் நூலாசிரியர் சமூக நீதிக்காக சட்டரீதியாகவும் இயக்க ரீதியாகவும் ஆற்றிய அரும் பணிகளை ஆதாரங்களுடன் நிறுவியுள்ளது சிறப்பு.

தம் வாழ்நாள் முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும் சமூக நீதிக்காகவும் பாடுபட்ட டாக்டர் அம்பேத்கர் தாம் தேர்தலில் போட்டியிடும் போதெல்லாம் தோற்றது வரலாற்றுச் சோகம். அவரது அறிவையும் ஆற்றலையும் கண்டு ராஜ்யசபா மூலம் உறுப்பினர் ஆக்கப்பட்டு நேரு அமைச்சரவையில் இடம்பெற வேண்டியதாயிற்று. அதே வேளையில் மத்திய அமைச்சர் பதவி என்பது தமது கொள்கைக்கு இடையூறாக இருக்கும் பட்சத்தில் அதைத் துச்சமாக பாவித்து பதவியிலிருந்து விலகி அப்பழுக்கற்றவராய் ஜொலித்தார் என்பதையும் பார்க்க முடிகிறது.

எனவேதான் அம்பேத்கரின் உயரிய லட்சிய மான சமூகநீதி என்பது இன்று இந்திய அரசியல், சமூக


வாழ்வின் உன்னத லட்சியமாகி உள்ளது. சமூக நீதி என்பதில் தனி மனித உரிமை, சமத்துவம், மனிதாபிமானம், மனித கண்ணியம், சம வாய்ப்பு, உயர்வு, தாழ்வு அற்ற நிலை போன்ற அனைத்தும் உள்ளடக்கியுள்ளது. 1920ஆம் ஆண்டு முதல் 1956 வரையப்பட்ட 36 ஆண்டுக் காலத்தில் அம்பேத்கர் உயர்த்திப் பிடித்த லட்சியப் பதாகை இது என்று சரியாகவே கூறியுள்ளார் நூலாசிரியர்.

எனவேதான் "தாழ்த்தப்பட்ட மக்கள் கண்ணிய மான வாழ்விற்காகவும் வறுமையிலிருந்து தப்புவதற்காக வும் நெடுங்காலமாக காத்துக் கொண்டிருக்கிறார்கள். டாக்டர் அம்பேத்கர் ஏற்றி வைத்த போராட்டத் தீயானது ஏழை-எளிய மக்களுக்கு சமூகநீதி என்ற இலக்கை நாம் அடையும் வரை தொடர்ந்து எரியச் செய்யப்பட வேண்டும்" எனும் என். ராமகிருஷ்ணனின் அறைகூவல் சாலப் பொருத்தமானதே.

"மார்க்ஸ், பெரியார், அம்பேத்கர் ஆகியோ ருடைய கோட்பாடுகளுக்கும், முற்போக்கு சிந்தனைகளுக்கும் முற்றிலும் நேரெதிரான சித்தாந்தத்தை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டுள்ளது மத்திய ஆளுங்கட்சி. ஒரு புறத்தில் மக்களை அது பிளவுபடுத்தி, மதவெறியைத் தூண்டி அதன்மூலம் தங்களுடைய இந்துத்துவ நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவது, மறுபுறத்தில் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு சேவகம் செய்வது என்ற இரட்டைக் கடமையினை பா.ஜ.க. பரிவாரம் செய்து வருகிறது. வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னோகக்கித் தள்ள முயலும் இவர்களை முறியடித்து முன்னேற்றப் பாதையில் இந்திய நாடு பயணித்திட நிலப்பிரபுத்துவ நவீன முதலாளித்துவச் சுரண்டலை எதிர்த்த வர்க்கப் போராட்டங்களையும் இணைந்து முன்னெடுப்பது காலத்தின் கட்டாயம்" எனும் கே. பாலகிருஷ்ணனின் அணிந்துரையில் இடம் பெறும் கருத்து முக்கியத்துவம் வாய்ந்தது. இதை ஈடேற்ற மார்க்ஸ் பெரியார் அம்பேத்கர் எனும் முப்பெரும் ஆளுமைகளைப் பின்பற்றும் இயக்கத்தார் ஒன்றுபடுவதும் போராடுவதும் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய அரும்பணிக்குப் பெருமளவில் உதவுவதாக அமையும் இந்நூல் வாங்கிப் படிக்க வேண்டியது இன்றைய தலைமுறையின் தலையாய கடமை.

மார்க்ஸ் பெரியார்
அம்பேத்கர்
ஒற்றுமையும்
முரண்பாடும்
என். ராமகிருஷ்ணன்
பக்கம் 320...விலை
ரூ.320.
கிடைக்குமிடம்
பாரதி புத்தகாலயம்
7 இளங்கோ சாலை
தேனாம்பேட்டை
சென்னை 18




- **பெரணமல்லூர் சேகரன்**

# துறைவாரி சங்க நிகழ்வு



தமிழ்நாடு அரசு புள்ளிஇயல் சார்நிலை அலுவலர் சங்கத்தின் அமைப்பு தின கூட்டம் திருச்சி மாவட்ட துணைத் தலைவர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் தோழர் பாலசுப்பிர மணியன் வரவேற்புரை யாற்றினார். புள்ளியியல் உதவி இயக்குநர்கள் திரு அபிராமன், லெட்சுமணன், இராஜலெட்சுமி, தோழர்கள் சீதர், ராமேஷ், கருணாநிதி, சக்திவேல் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநில பிரச்சார செயலாளர் தோழர் முனைவர் கா.பால் பாண்டி சங்கத்தின் வரலாறு சங்கம் கடந்து வந்த பாதை, சங்கத்தின் சாதனைகள் குறித்து சிறப்புரையாற்றினார்.

# தற்காலப் புரட்சியாளர்களின் முன்னோடி
# சே குவேரா நினைவு தினம் அக்டோபர் 08



**நி**க்கோலோபஸ்க்கு, குவேத மாலாவில் 'சே'வைச் சந்தித்தபோது புத்துணர்ச்சி ஏற்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க சில யோசனைகள் அவரது எண்ணத்தில் பளிச்சிட்டன. சித்தாந்தங்களில் தேர்ச்சி பெற்றிருந்த சே குவேரா மட்டும் கியூபா புரட்சியில் பங்கெடுத்தால், போராட்டத்துக்கு ஒரு புது வடிவம் கிடைக்கும் என்று லோபஸ் நம்பினார். இது குறித்து காஸ்ட்ரோவின் சகோதரர் ரால் காஸ்ட்ரோவுடன் பேசினார்.

இரண்டு மகத்தான சக்திகள் இணைந்த தருணம் கியூபா வளர்ச்சியின் அஸ்திவாரம். அப்போது 'சே'வுக்கு வயது 27. காஸ்ட்ரோவுக்கு 32. காஸ்ட்ரோவுக்காவது கியூபா தன் சொந்த நாடு. போராடிய வேண்டிய அவசியம் இயல்பானது. ஆனால் 'சே'வுக்கு அப்படி அல்ல. தனக்கு முற்றிலும் தொடர்பற்ற மற்றொரு தேசத்தில், அம்மக்களின் விடுதலைக்காகத் தன் உயிரைப் பணயம் வைத்து ஆயுதம் எடுப்பதென்பது, உலக வரலாற்றில் எப்போதும் எங்கும் நிகழ்ந்திராத ஒன்று. இதனால்தான் 'சே' மனிதருள் மாமனிதராக அடையாளம் காணப்பட்டார்.

புரட்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. ஏறக்குறைய ஒன்றரை வருட கடுமையான ஆயுதப் பயிற்சிக்குப் பிறகு 1956, நவம்பர் 26ம் தேதி இரவு மெக்ஸிகோ கடற்கரையில், 82 போராளிகள் ஒருவர் பின் ஒருவராக ஏறிக்கொண்டபின், விடுதலையின் பாடலை முழங்கியபடி, கிரான்மா எனும் படகு கியூபாவை நோக்கிப் பயணித்தது.

காலநிலையில் ஏற்பட்ட சிக்கலால் படகு எதிர்பார்த்த இடத்தை எதிர்பார்த்த நேரத்தில் அடைய முடியாமல் போகின்றது. 1957, ஜனவரி 17ம் தேதி, தளபதி லா பிளாட்டோ கொல்லப்பட்டதன் மூலம் புரட்சியாளர்களின் முதல் வெற்றிச் சங்கொலி கியூபாவில் எதிரொலித்தது. அன்று துவங்கி மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக நடந்தது கெரில்லா யுத்தம். துவக்கத்தில் குழுவில் மருத்துவராகவும் லெஃப்டினென்ட்டாகவும் இடம்பெற்ற 'சே', தன் திறமை, துணிச்சல், மதிநுட்பம் ஆகியவற்றால் காஸ்ட்ரோவுக்கு அடுத்த நிலையிலிருந்து படைகளை வழி நடத்தினார். கொரில்லாப் படைக்குக் கமாண்டராக அறிவிக்கப்பட்ட 'சே' கடுமையான ஆஸ்துமா துன்புறுத்தியபோதிலும், அடர் காடுகளிலும், மலைகளிலும் சளைக்காமல் வீரர்களுக்குத் தெம்பூட்டியபடி படையை வழி நடத்தினார். "சாவைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. என் பின்னால் வரும் தோழர்கள் என் துப்பாக்கியை எடுத்துக் கொள்வார்கள். தோட்டாக்கள் தொடர்ந்து சீறும்''போன்ற அவரது வாசகங்கள், களத்தில் வீரர்களுக்கு தெம்பூட்டி சீற்றம் கொள்ளவைத்தன.

1958 ஆகஸ்ட் மாதத்தில், புரட்சிப் படை தலைநகர் ஹவானாவுக்குள் ஊடுருவியது. கியூபா முழுவதும் காஸ்ட்ரோவின் வசமானது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கெரில்லா யுத்த வெற்றி, உலகின் அனைத்து நாடு களையும் வியப்பில் ஆழ்த்தியது.

1959, பிப்ரவரி 16ல் கியூபாவின் பிரதமராக காஸ்ட்ரோ பதவியேற்றவுடன் சேகுவேராவை ஒரு கியூபன் என்றுஅறிவித்தபிறகு அந்த வருடம் அக்டோபர் மாதம் தேசிய வங்கியின் அதிபராகவும் ஃபிடல் காஸ்ட்ரோவால் நியமிக்கப்பட்டார்.

தேசிய வங்கியின் தலைவராக கியூபா ரூபாய் நோட்டுகளில் 'சே' என கையெழுத்திடும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றார். பின் 1961ம் ஆண்டு தேசிய வங்கியின் பதவியைத் துறந்து தொழிற்துறை அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டார். இருந்தாலும் 'சே' தன்னை ஒரு சாதாரணக் குடிமகனாகவே அடையாளம் காட்டிக் கொண்டார்.

தற்காலப் புரட்சியாளர்களின் முன்னோடி சே குவேரா. ஆட்சி அதிகாரம் கைக்கு வந்தா??லும் புரட்சிகர எண்ணங்களில் மாற்றம் வந்துவிடக்

கூடாது என்பதில் கவனமாக இருந்தவர். மரணம்வரை புரட்சி செய்த போராளி சே குவேராவின் நினைவு தினம் இன்று.

சே நினைவு தினம் இன்று. தலைகுனிந்து வாழ்வதைவிட, நிமிர்ந்து நின்று செத்துப் போவது மேல் என்று முழங்கியவர் சே குவேரா. முதலாளித்துவம் எங்கெல்லாம் தீவிரமாகச் செயல்படுத்தப்படுகிறதோ அங்கெல்லாம் சமூக நீதி பாதிக்கப்படும் என்ற கருத்து அவருக்குள் இருந்தது. அமெரிக்காவாக இருந்தாலும் ஐரோப்பிய நாடுகளாக இருந்தாலும் முதலாளித்துவம் அடிமைகளை உருவாக்குவதற்கே பயன்படுகிறது என்று சே கூறினார். அமெரிக்கா குறித்து அந்த நாட்டுக்கே சென்று கண்டித்துப் பேசினார்.

கியூபாவின் மூத்த அமைச்சர், மத்திய வங்கியின் தலைவர் என வசதியும் அதிகாரமும் அவரிடம் இருந்தபோதுகூட, புரட்சியாளர் என்ற அடையாளத்தில் இருந்து அவர் விலகிவிட விரும்பவில்லை. அவரது தீவிர முதலாளித்துவ எதிர்ப்பு நடவடிக்கைகளால் பல நாடுகள் அவருக்கு எதிரிகளாகியிருந்தன. அவரது உயிருக்குக் குறிவைக்கப்பட்டிருந்தது. ஐக்கிய நாடுகள் சபையில் பேசுவதற்காக 1964-ஆம் ஆண்டு நியூயார்க் நகருக்கு அவர் சென்றபோது இரண்டு முறை அவரைக் கொல்வதற்கு எதிரிகள் முயற்சி செய்தார்கள். தப்பித்துவிட்டார்.

ஆனால் அதன் பிறகு கியூபாவின் ஆட்சி நிர்வாகத்தில் இருந்து படிப்படியாக விலகினார். அனைத்துப் பதவிகளையும் ராஜினாமா செய்தார். ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டு கியூபாவை விட்டு வெளியேறினார். கியூபாவில் இருந்து வெளியேறிய சே குவேரா, ஆப்பிரிக்க நாடான காங்கோவுக்குச் சென்றார். சில கியூப வீரர்களைத் தன்னுடன் அழைத்துச் சென்ற சே குவேரா, காங்கோ புரட்சிப் படையுடன் இணைந்து அரசுக்கு எதிராகப் போரிட்டார்.

1966-ஆம் ஆண்டு கியூபாவில் இருந்து வேறொரு பெயரில் போலி பாஸ்போர்ட் மூலம், தென் அமெரிக்க நாடான பொலிவியாவுக்கு வந்தார். 50 பேரைக் கொண்டு அரசுப்படைகளுக்கு எதிரான போரை நடத்தினார். தென் அமெரிக்காவின் புவியியல் அமைப்பைப் புரிந்து வைத்திருந்த சே குவேராவைச் சமாளிக்க முடியாமல் பொலிவியப் படைகள் திணறின. நாள்கள் செல்லச் செல்ல நிலைமை தலைகீழாக மாறியது பொலிவியப் பெரும்படை, சே குவேராவின் கெரில்லா வீரர்களை ஒவ்வொருவராகக் கொல்லத் தொடங்கியது. இறுதியாக சே குவேராவைப் பிடிப்பதற்கு அமெரிக்காவின் சிஐஏ அமைப்பின் உதவியுடன் திட்டம் வகுக்கப்பட்டது.

பல மாதத் தேடலுக்குப் பிறகு, 1967-ஆம் ஆண்டு அக்டோபர் 8-ஆம் தேதி, சுமார் 1800 வீரர்கள் சே குவேராவைச் சுற்றி வளைத்துக் கைது செய்தார்கள். சே குவேரா யுத்தத்தில் காயமடைந்திருந்தார். மறுநாள் எந்தவிதமான விசாரணையும் இன்றி பொலிவியப் படை அவரைச் சுட்டுக் கொன்றது. 9 குண்டுகள் பாய்ந்திருந்த சே குவேராவின் உடல், அடையாளம் காண முடியாத இடத்தில் புதைக்கப்பட்டது.

சே குவேரா கொல்லப்பட்டார் என்ற செய்தி உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சே குவேரா இறந்து சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டு, கியூபாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இன்று புரட்சியாளர்களின் அடையாளமாக சே குவேரா பார்க்கப்படுகிறார். பிடெல் காஸ்ட்ரோவுடன் கருத்து வேறுபாடு இருந்தாலும், சே குவேரா இன்றும் தேசிய நாயகனாகவே திகழ்ந்து வருகிறார்.

- மு.பாஸ்கரன்

## ஆழ்ந்த இரங்கல்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ராமநாதபுரம் மாவட்டத்தின் முன்னாள் மாவட்ட தலைவரும், கருவூல கணக்குத் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட தலைவருமான அன்பு தோழர் வீரபெருமாள் 9.9.2021 அன்று மதுரையில் இயற்கை எய்தினார். சிறந்த தொழிற்சங்கவாதி. ஊழியர்கள் நலனுக்காக சமரசமற்ற போராளியாக திகழ்ந்த அன்புத் தோழரின் மறைவு மிகுந்தவருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம். தோழரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

**ABSTRACT**

Fundamental Rules - Instruction 4(b) under Fundamental Rule 44 - House Rent Allowance while on leave - Amendment - Orders - Issued.

---

Human Resources Management (FR-II) Department

G.O.(Ms) No. 89 Dated: 09.09.2021

பிலவ வருடம், ஆவண் 24,

திருவள்ளுவர் ஆண்டு 2052

Read:

1. G.O. (Ms.) No. 105, Personnel and Administrative Reforms (FR-11) department, dated 07.11.2016.

2. G.O (Ms.) No. 154, Personnel and Administrative Reforms (FR-II) department, dated 05.12.2017.

3 From the Principal Secretary / Commissioner of Treasures and Accounts, Chennai-35, Letter Rc.No.28571/D2 / 2019, dated 22.08.2019.

4. G.O. (Ms.) No. 84, Human Resources Management (FR-11) department, dated 23.08.2021.

**ORDER:**

Instruction 4(b) under Fundamental Rule 44 provides that "*While on leave with allowances*.-A Government servant, shall be permitted to draw house-rent allowance for six months of leave including maternity leave but not extraordinary leave. He shall be paid house-rent allowance during the period of leave at the rates at which he was entitled to it prior to going on leave irrespective of whether he is reposted to the same station or not."

2. In the Government Order first read above, orders were issued extending the maternity leave from 180 days to 270 days to married women Government senants. In the Government Order second read above, Instruction 1 under Fundamental Rule 101(a) has been amended accordingly.

3. In the Government Order fourth read above, orders were issued enhancing the maternity leave from 9 months (270 days) to 12 months (365 days) to married women Government servants.

4. The Government have examined the above provisions under Fundamental Rules. The grant of maternity leave under rule 101(a) of Fundamental Rules is an exception and special concession under section VI in part IV of the Fundamental Rules and House Rent Allowance shall be permissible for the entire period of maternity leave. Therefore, the Government decided to amend Instruction 47) of Fundamental Rule 44 suitably and accordingly, the following notification wil be published in the Tamil Nadu Government Gazette:-

**NOTIFICATION.**

In exercise of the powers conferred by the proviso to Article 309 read with Article 313 of the Constitution of India and of all other powers hereunto enabling, the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the Fundamental Rules and the Instructions thereunder.

2. The amendment hereby made shall be deemed to have come into force on the 7th November 2016.

**AMENDMENT.**

In the said Fundamental Rules, in rule 44, under the heading "INSTRUCTIONS UNDER RULE 44", in instruction 4, in clause (b), the expression "including maternity leave" shall be omitted.

(BY ORDER OF THE GOVERNOR)

MYTHILI K. RAJENDRAN
SECRETARY TO GOVERNMENT

# அக்டோபர் 27: தோழர் ஜதீன்தாஸ் பிறந்த நாள்



**தோ**ழர் ஜதீன்தாஸ் 1904ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் நாள் பிறந்தார்.

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் தோழர் பகத்சிங்குடன் இணைந்து பணியாற்றினார்.

1929ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பகத்சிங் சதிவழக்கில் கைதுசெய்யப்பட்டு லாகூர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் விடுதலைப் போராளிகள் கிரிமினல் கைதிகள் போலத் தரக்குறைவாக நடத்தப்பட்டனர்.

இதனைக் கண்டு கொதித்த தோழர் பகத்சிங்

எதிர்த்துப் போராட முடிவு செய்தார்.

சிறையில்... அதுவும் பரங்கியர் சிறையில்

போராட்டம் என்பது சாத்தியமா?

எந்த ஆயுதத்தைக் கையில் எடுப்பது?

எவ்வாறு தீர்வு காண்பது? என்று புரட்சியாளர்கள்

சிறையில் சிந்தித்தபோது அவர்கள் கையில் எடுத்த

ஆயுதம்தான் அகிம்சை என்னும் அற்புத ஆயுதம்.

அகிம்சை என்னும் போராட்டத்திற்கு

ஆயுதங்கள் தேவையில்லை...

உடல்பலம் தேவையில்லை...

ஆன்மபலம் மட்டுமே வேண்டியிருந்தது.

கட்சியின் மத்தியக்குழு முடிவின்படி

தோழர் பகத்சிங் உள்துறை அமைச்சருக்கு

கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைத்துக் கடிதம் எழுதினார்.

விடுதலைப் போராட்டக் கைதிகள்

அரசியல் கைதிகளாக நடத்தப்படவேண்டும்...

குளிப்பதற்கு வசதி செய்து தரப்பட வேண்டும்.

சுத்தமான ஆடைகள் வழங்கப்பட வேண்டும்.

தரமான உணவு வழங்கப்பட வேண்டும்..

ஒவ்வொரு கைதிக்கும் செய்தித்தாள் வழங்க வேண்டும்.

படிக்கவும் எழுதவும் தேவையான பொருட்களை வழங்க வேண்டும்..

அரசியல் கைதிகளுக்கென தனிப்பிரிவு

சிறைவளாகத்தில் அமைக்கப்பட வேண்டும்.

கட்டாய உடலுழைப்பு செய்ய

விடுதலைப் போராளிகளைக் கட்டாயப்படுத்தக் கூடாது.

பணியுமா? பரங்கியர் அரசு...

மேலும் கைதிகளைக் கொடுமை செய்யத்துணிந்தது.

எனவே பகத்சிங் உள்ளிட்ட தோழர்கள்

தங்களது கோரிக்கைகளுக்காக அகிம்சை என்னும் ஆயுதம் ஏந்தினர்.

உண்ணாவிரதம் தோழர்களுக்குப் புதிது.

ஆனால் அதே சிறையில் இருந்த

கட்சியின் மூத்த தோழர் ஜதீன்தாஸ் மட்டுமே

உண்ணாவிரதம் இருந்து அனுபவம் பெற்றவர்.

எனவே அவரிடத்தில் தோழர்கள் ஆலோசனை செய்தனர்.

தோழர் ஜதீன்தாஸ் தெளிவுபடக் கூறினார்.

தோழர்களே...

அகிம்சைப் போராட்டம்

ஆயுதப்போராட்டத்தை விட மிகக்கடினமானது.

போலீசாரின் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாவது எளிது.

உயிர் உடனே போய்விடும்.

உண்ணாவிரதம் என்பது அப்படியல்ல.

அணுஅணுவாக சாவை எதிர்கொள்ள வேண்டும்.

தூக்குமேடை ஏறி...

கழுத்தில் கயிற்றை சுருக்குவது எளிது.

ஆனால் வயிற்றை சுருக்குவது மிகக்கொடிது.

ஆயுதப்போராட்டத்தில் ஆயுதம் தீர்ந்துவிட்டால்

நமது போராட்டம் முடிவுக்கு வந்து விடும்.

ஆயுதப்போராட்டத்தில் நாம் பதுங்கிப் பாயலாம்.

ஆயுதத்தைக் கீழே போட்டு சரணடையலாம்.

ஆனால் அகிம்சைப் போராட்டத்தில்

பின்வாங்குவது என்பதே கிடையாது.

கோரிக்கைகள் தீரும்வரை சமரசம் என்பதே கிடையாது.

ஆயுதபலத்தை விட ஆயிரமாயிரம் மடங்கு

ஆன்மபலம் வேண்டும் என்று தன் தோழர்களுக்கு

தோழர்.ஜதீன்தாஸ் அறிவுறுத்தினார்.

தோழரின் அறிவுரையை பகத்சிங் நெஞ்சில் நிறுத்தினார்.

ஜூன் 15ம்தேதி உண்ணாவிரதம் ஆரம்பமானது.

ஜூலை 10ம்தேதி லாகூர் சதிவழக்கு விசாரணை ஆரம்பமானது.

விசாரணையின்போதும்

உண்ணாவிரதத்தைக் கடைப்பிடித்தார் தோழர் பகத்சிங்.

பலவழிகளிலும் உண்ணாவிரதத்தை முறியடிக்க

பரங்கியர்கள் முயற்சி செய்து

தோல்வியுற்றனர்.

கைதிகளுக்கு தண்ணீர் வழங்குவது நிறுத்தப்பட்டது.

பாலகர்கள் மயங்கிவிடுவார்கள் என நினைத்து

தண்ணீர்க்குடத்தில் பால் வைக்கப்பட்டது.

தோழர்கள் பால்குடத்தை உடைத்து எறிந்தார்கள்..

பழங்களும்... இனிப்புகளும் சிறைக்குள் அனுப்பப்பட்டன.

அனைத்தையும் ஆன்மபலத்தோடு ஒதுக்கித்தள்ளினர் தோழர்கள்.

மருத்துவர்களை அனுப்பி வாயில் குழாய் செருகி

உணவை வலுக்கட்டாயமாக செலுத்தினர்.

பற்களால் குழாயைக் கடித்து...

மனபலத்தோடு மருத்துவரோடும்

மரணத்தோடும் போராடினர் தோழர்கள்..

தோழர்களோடு சேர்ந்து உண்ணாவிரதம் மேற்கொண்ட

தோழர் ஜதீன்தாஸ் மருத்துவர்களின்

மனிதாபிமானமற்ற செயலால்

நுரையீரலில் உணவு செலுத்தப்பட்டு

செப்டம்பர் 13 அன்று உயிர் துறந்தார்.

ஜதீன்தாஸின் மரணம் உண்ணாவிரதத்தை மேலும் உரமேற்றியது.

முடிவாக 1929 அக்டோபர் 4ந்தேதி உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது.

பகத்சிங், சுகதேவ், மற்றும் பி.கே.சின்ஹா

ஆகியோரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு அரசியல் கைதிகளுக்கான உரிமைகளைப் பெற்றார்கள்.

- **பெரணமல்லூர் சேகரன்**

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com